ISSN: 2012 - 6352

தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி | சமய - சமூக - இலக்கிய வெளியீடு | நவம்பர் 2010 | 25/=

இலங்கையின் இரண்டாவது கருதினாலாக பேரருட்தந்தை மல்கம் ரஞ்சித் ஆண்டகை

திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்ட திருச்சபையின் வாழ்த்துகளும் செபங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டன்

நவம்பர் 2010

மலர்- 42 இதழ்- 10

ஆசிரியர்
றொஹான் பேனார்ட்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள்
மெற்றில்டா இராஜேந்திரம்
பெல்லீயோ வாஸ்
வயலற் சந்திரசேகரம்
பைந்நமிழ்க்குமரன் டேவிட்

ஆலோசகர்கள்
A.G. இராஜேந்திரம்
A.S. யோகராஜா

கணினி வடிவமைப்பு
நிரோன்

ஓவியங்கள்
சுதா

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

பதிப்பகம்
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.

உள்ளே

அன்புடன் உங்களோடு....	-	01
பேராயர் மல்கம்...	-	02
பருவத்தே பயிர்செய்	-	04
ஈழத்தை அளந்த புனிதன்	-	05
கொழும்பில் நடைபெற்ற...	-	06
சகல புனிதர்கள்...	-	08
செட்டை முறிந்த... (கவிதை)	-	10
ஒரு கலை... (சிறுகதை)	-	11
திருக்குடும்ப துணை...	-	15
தளிர்	-	18
திருகோணமலை...	-	20
மாணவர் பக்கம்	-	21
உங்கள் சுகமான...	:	23
இலங்கையில்...	:	24
வியட்நாமின்...	:	26
விவிலியம் கற்போம்	-	27
அறிவை வளர்ப்போம்	-	28

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com

விலை : 25/=
ஆண்டு சந்தா : 400/=
(தபாற்செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் உங்களோடு...

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ் விரண்டுங் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" கண்ணானது (பார்வை) எவ்வாறு உடலுக்கு அவசியமோ அதுபோன்றே கல்வியும் அத்தியாவசியமானது. மனித உரிமைகளில் முக்கியமானதொன்று கல்வி கற்கும் உரிமை. கல்வி கற்கும் உரிமை இருந்தும் வசதி வாய்ப்புகளிருந்தும் அதனை முறைப்படி கற்றுக்கொடுக்காவிட்டாலும் ஆபத்து; கற்றுக்கொள்ளாவிட்டாலும் ஆபத்து. முறைப்படி கற்றுக்கொடுக்காவிட்டால் ஒரு சமூகமே வீழ்ச்சியைச் சந்திக்க வேண்டி வரலாம்.. அதேபோல் முறைப்படி கற்றுக்கொள்ளாவிட்டாலும் அது வீட்டுக்கும் நாட்டுக்கும் கேடாக அமையவே வாய்ப்பிருக்கிறது.

இன்று பாடசாலைகளில் பிரம்பு தூக்கும் சட்டம் இல்லை; இதனால் மாணவர்கள் ஆசிரியர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதும் இல்லை; மதிப்பதும் இல்லை. சில பாடசாலைகளில் சில மாணவர்கள் தலைதெறிக்க நடந்து கொள்கிறார்கள். பாடசாலைகளின் நிலைமை இவ்வாறென்றால் பல்கலைக்கழகங்களின் நிலைமையோ அதைவிட மோசமாக உள்ளது.

ஒரு நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுக்குத்தான் அந்த நாட்டுக்குரிய கல்விமான்களையும், புத்திஜீவிகளையும், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களையும், அரசியல் தலைவர்களையும் இவற்றிற்கெல்லாம் மகுடமாக கண்ணியம் நிறைந்த குடிமக்களையும் உருவாக்குகின்ற கடப்பாடு உண்டென்று கருதப்படுகிறது. இது உண்மையுங்கூட. ஆனால், அனேகமாக அனைத்துப் பல்கலைக்கழங்களிலும் மாணவர்களுக்கிடையே மோதல்களும், நிர்வாகத்திற்கும் மாணவர்களுக்குமிடையே முறுகல் நிலையும் என அடிக்கடி மூடப்படுவதனால் மூன்று வருடப் படிப்பு சிலவேளைகளில் ஐந்து வருடமாகக்கூடப் போய் விடுகிறது. பல்கலைக்கழகங்களில் அரசியல் கட்சிகள், அடிதடிக் கும்பல்கள் ஊடுருவி ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாலும் தங்கள் கொள்கைகளைப் பரப்புவதாலும் போதைவஸ்துகளை வினியோகிப்பதாலும் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். அவர்களின் எதிர்காலமும் சின்னாபின்னமாக்கப்படுகின்றது. ஒரு பிரச்சினையைக் கையாளும் விதம் வன்முறையாகவே உள்ளது. **வன்முறையால் வன்முறையை வெல்ல முடியாது** என்னும் தார்மீகப் படிப்பினையை அரசாங்கமும் சரி எதிர்காலத் தலைவர்களாகிய இன்றைய மாணவர்களும் சரி முதலில் கற்றுக்கொள்ளட்டும். ஒருசில புள்ளிகளால் பல்கலைக்கழக நுழைவு கிடைக்காத எமது நாட்டு மாணவர்கள் வெளிநாடுகளில் பல சிரமங்களுக்கு மத்தியில் அதிகப் பணத்தைச் செலவிட்டு கல்வி பயில்கின்றார்கள். ஆகவே, இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதால் இந்த நிலைமையை ஈடு செய்யலாம். அத்தோடு கல்வியில் போட்டித் தன்மையையும் வினைத்திறனையும் மாணவர்களில் கொண்டுவரலாம்.

பிறந்திருக்கும் கார்த்திகை மாதத்தில் அனைத்துப் புனிதர்களின் நாள் அனுசரிக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து அனைத்து ஆத்துமாக்கள் தினம் நினைவுகூரப்படுகிறது. இவ்விரு தினங்களும் மனிதன் புனிதனாகலாம் என்பதையும் மனிதனுக்கு இந்த மண் சொந்தமல்ல என்பதையும் உணர்த்தி நிற்கின்றன. கொண்டாடும் ஹஜ் திருநாளும் கடவுளுக்குப் பணிந்திருத்தல், உணவு உறையுள் தந்தமைக்காக நன்றி செலுத்துதல், பகிர்ந்து வாழுதல், திருப்பயணம் மேற்கொள்ளல் போன்ற பண்புகளை வெளிப்படுத்துகின்றன. நாம் வாழும் இந்த நாட்களில் நிரந்தரமற்ற இவ்வுலகில் நல்லது செய்து கடவுளைப் புகழ்ந்து புனிதனாக முயற்சிப்போம். தீபத்திருநாள் கற்றுத் தருவது போன்று அநீதியை அழித்து உண்மையை வாழச் செய்வோம். அனைவரது வாழ்விலும் ஒளியேற்ற ஒளியாம் இயேசுவின் வழி செல்வோம்.

– ஆசிரியர்

இறைவாக்கு

"எனது பிரசன்னம் உன்னோடு செல்லும். நான் உனக்கு இளைப்பாறுதல் அளிப்பேன்"

(வி.ப: 33:14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராயர் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை கர்தினாலாக நியமனம்



கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் பேரருட்தந்தை மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை அவர்கள் திருத்தந்தையினால் கர்தினாலாக அறிவிக்கப்பட்டுள்ளார். திருச்சபையின் இளவரசர்கள் என்று வர்ணிக்கப்படும் கர்தினால்கள் திருத்தந்தையைத் தெரிவு செய்யும் அதிகாரம் பெற்றவர்கள். ஏற்கனவே திருச்சபையில் 102 கர்தினால்கள் உள்ளனர். தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள 20 கர்தினால்களுடன் கர்தினால்களின் எண்ணிக்கை 122 ஆக உயர்ந்துள்ளது. திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களால் புதிதாய்த் தெரிவு செய்யப்பட்ட 20 கர்தினால்களில் பேராயர் மல்கம் அவர்கள் மட்டுமே ஆசியாவைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய 19 பேரும் சுவிற்சர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா, கொங்கோ குடியரசு, இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

குருணாகலில் உள்ள பொல்கஹவெலயில் 1947ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ம் திகதி பிறந்த ரஞ்சித் ஆண்டகை தம் குடும்பத்தில் ஒரேயொரு மகனாவார். அப்படியிருந்தும் அவரை இறைபணிக்கு அர்ப்பணித்த அவரது பெற்றோர் டொன் வில்லியம், மேரி வினிபரீடா தம்பதியினர் போற்றுதலுக்குரியவர்கள்.

இவர் தனது கல்வியை கொழும்பு டிலாசால் கல்லூரியிலும் குருத்துவக் கல்வியை பொரளை புனித அலோசியஸ் குருமடத்திலும் கண்டி தேசிய குருமடத்திலும் பெற்றார். அப்போது கொழும்பு பேராயரும் இலங்கையின் முதலாவது கர்தினாலுமான பேரருட்தந்தை தோமஸ் குரேயினால் உரோமைக்கு உயர் கல்விக்காக அனுப்பப்பட்டார். அங்கு 1975ம் ஆண்டு ஜூன் மாதம் 29ம் திகதி திருத்தந்தை 6ம் பவுலினால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் உயர் கல்வியை முடித்து 1978ம் ஆண்டு நாடு திரும்பினார். ஏறத்தாழ 12 ஆண்டுகள் பங்குகளில் பணியாற்றியவர் 1991ம் ஆண்டு கொழும்பு மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமிக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து இரத்தினபுரி மறைமாவட்டத்தின் முதல் ஆயராக 1995ம் ஆண்டு நியமிக்கப்பட்ட அவர் 2001 வரை அங்கு பணி புரிந்தார். 2004 வரை வத்திக்கானின் மறைபரப்புப் பேராயத்தின் செயலாளராகவும் 2005 வரை இந்தோனேஷியா மற்றும் கிழக்குத் திமோருக்கான திருத்தந்தையின் தூதராகவும் பணி புரிந்ததோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டன் சிறப்பு வினாவிடைப் போட்டி

இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற மறைமாவட்ட சமூகத் தொடர்பு தினத்தை முன்னிட்டு தொண்டன் சிறப்பு வினாவிடைப் போட்டி ஒன்றை நடத்தியது. அப்போட்டியில் பரிசுக்குத் தெரிவாகிய எண்மருக்கும் தொடர்புதின விழாவிலே பரிசுகளும் வழங்கப்பட்டன. பரிசு பெற்றவர்களின் விபரங்கள் பின்வருமாறு:

முதலாம் பரிசு: 3000/=
திருமதி. சு. சச்சிதானந்தம்
123/8, சர்வோதயா ஒழுங்கை
வாடி வீட்டு வீதி
கல்முனை - 01

இரண்டாம் பரிசு: 2000/=
செல்வி. J.P.பல்லவி
27, தாமரைக்கேணி வீதி
மட்டக்களப்பு

மூன்றாம் பரிசு: 1000/=
செல்வி. பி. சுகுணா
25/7, 1ம் குறுக்கு வீதி
சின்ன ஊறணி
மட்டக்களப்பு

ஆறுதல் பரிசு பெற்றோர்

- செ. கபிரியேல்
  4B, டயஸ் ஒழுங்கை
  மட்டக்களப்பு
- நொறேஞ்சலா றெஜினோல்ட் கெஷியன்
  291/17, ஏகாம்பரம் வீதி
  திருகோணமலை
- M.D.நிரோஷினி
  36, 2ம் குறுக்கு
  கூளாவடி
  மட்டக்களப்பு
- கிறிஷான் பாத்லட்
  171, பிரதான வீதி
  கறுவாக்கேணி
  வாழைச்சேனை
- ஆ.பிரபாஜினி
  63/26, புதுமுகத்துவார வீதி
  கல்லடி
  மட்டக்களப்பு

"முப்பது வருசமா இந்த வழக்கு இழுபடுது"

"அப்ப ஜனாதிபதி வெண்டுத்தார் எண்டு சொல்லு"

• மணி

2005 முதல் 2009 வரை நற்கருணைக்கான வணக்கம் மற்றும் ஒழுங்கு முறைக்கான செயலாளராகவும் பணி புரிந்தார். திருப்பீடத்தில் இத்தகைய உயர் பதவிகளை வகித்த முதல் இலங்கையர் என்ற பெருமைக்குரிய பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை 2009ம் ஆண்டு முதல் கொழும்பு மறைமாவட்டத்தின் பேராயராக திருத்தந்தையால் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்.

தற்போது திருத்தந்தையால் கர்தினாலாக நியமனம் பெற்று இலங்கைத் திருச்சபைக்கும் ஆசியத் திருச்சபைக்கும் பெருமை சேர்த்துள்ள பேராயரின் பணிவாழ்வு சிறக்க வாழ்த்துவதோடு அவரது பணியால் அன்னையாம் திருச்சபை மேலும் பொலிவு பெற இறையாசீர் நிறைவாகக் கிடைக்க வேண்டுவோம்.

– எம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தை நம் முன்னோர் நான்கு வகையாகப் பிரித்திருக்கிறார்கள். கோடை காலம், மாரி காலம், இலையுதிர் காலம், வசந்த காலம் என்பவையே அந்த நான்கு காலங்களுமாகும். இந்த இந்தக் காலத்தில் இப்படி இப்படி நடக்குமென்று எம் முன்னோர் கூறியபடி குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட மாறுதல்களை நாம் அனுபவித்து, அவதானித்து வந்துள்ளோம்.

ஒவ்வொன்றிற்கும் ஒரு நேரமுண்டு, உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு காலமுண்டு என்று சபையுரையாளர் திருவிவிலியத்தில் 3ம் அதிகாரத் தொடக்கத்தில் குறிப்பிடுகின்றார். இது இம்மாதத்துக்குப் பொருத்தமானது. பிறப்புக்கு ஒரு காலம் இறப்புக்கு ஒரு காலம், நடவுக்கு ஒரு காலம் அறுவடைக்கு ஒரு காலம், கொல்லுதலுக்கு ஒரு காலம் குணப்படுத்தலுக்கு ஒரு காலம், இடித்தலுக்கு ஒரு காலம் கட்டுதலுக்கு ஒரு காலம், அழுகைக்கு ஒரு காலம், சிரிப்புக்கு ஒரு காலம், துயரப்படுவதற்கு ஒரு காலம் துள்ளி மகிழ்வதற்கு ஒரு காலம். இவ்வாறு பல்வகை நேரங்களும் காலங்களும் நமது வாழ்வில் வந்துபோகும். நாம் அவற்றைச் சந்தித்தே ஆகவேண்டும், கடந்தே முடிக்கவேண்டும் என்று சபையுரையாளர் நூலின் ஆசிரியர் கூறுகின்றார்.

நம்மைப் பொறுத்தவரையில் நாம் ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் நம் உடன் பிறப்புகளை, நம்மை அன்புசெய்தோரை ஏன் நாம் அன்பு செய்தோரை இழந்திருப்போம் - பிரிந்திருப்போம். விசேடமாக அவர்களையெல்லாம் நினைவுகூர்ந்து அவர்களுக்காக செபிக்கின்ற ஒரு மாதமாக இந்த நவம்பர் மாதம் நமக்குத் தரப்பட்டிருப்பதனை நீங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வீர்கள். இந்நூலாசிரியர் கூறுவதுபோல ஒவ்வொரு நிகழ்விற்கும் ஒவ்வொரு காலமும் நேரமும் அமையப் பெறுகின்றன என்று கொண்டால் நம் பிறப்பிற்கும் இறப்பிற்கும் ஒரு காலம் அமையப்பெறுவதைப் போன்று நம் மறுவுலக வாழ்விற்கும் அதற்கு முன்னரான நடுத்தீர்வை என்கிற நீதி விசாரணைக்கும் ஒரு காலம் நமக்குக் கிட்டத்தான் போகின்றது என்பதனை நாம் மறந்து வாழலாமா? ஏற்கனவே மறுவுலக வாழ்வுக்கு சென்றுவிட்டவர்களுக்காய் மன்றாடுகின்ற அதேவேளையில் நாம் நமது மறுவுலக வாழ்வுக்கான பயணத்திற்காக என்ன ஆயத்தங்களை, என்ன தயாரிப்புகளை முன்னெடுத்துக்கொண்டுள்ளோம்? காலம் நேரம் என்பது நிச்சயம் என்று முன்னறிவிக்கப்பட்டுள்ள போது நாம் நமது காலத்தை நேரத்தை எதிர்கொள்ள ஆயத்தமாவது பொருத்தமானதாக அமையுமல்லவா? தீமைகள் புரியவும், புரிந்த தீமைகளுக்காய் நீதி இருக்கையின் முன் நின்றே ஆகவேண்டிய காலங்களும் நேரங்களும் காத்திருப்பதனால் நல்லவைகள் செய்யவும் மனம் மாறி மறுவுலக வாழ்வுக்கான பிறரன்புப்

7ம் பக்கம் பார்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தை அளந்த புனிதன் (யோசேவ் வாஸ்)

குறுங்காவியம்

14 செண்பகக்குழல்வாய்மொழி

(வேறு)

அறுவடைக் கெனவேபுதிதாய்
ஆட்களை அனுப்பவேண்டி
அனுதினஞ் செபித்ததற்கு
இருவரைப் புதிதாயீசன்
மறுகரை யிருந்துஇன்னும்
மாதமோ ரிரண்டில்மன்னார்க்
கரைதனுக் கனுப்பவென்று
மறுமொழி யனுப்பிவைத்தார்

தினமவர் பணிவிடைக்குக்
கிடைத்தநற் பரிசாயின்னும்
புதியதொரு செய்தியந்த
மடலிலே கண்டு'விக்கா
ஜெனரலாய்' உயர்வுபெற்று
முதற்குரு அவரேயானார்
பிராமணன் ஒருவன்பெற்ற
பேறது சொல்லிமாளா

மடலது கிடைத்தமறுஉ
கணமதில் ஜோசப்வாசும்
மறுபடி வடமேல்நோக்கி
நகருவார் சோர்வுஇன்றி
இடையினிற் கரைபுரண்டு
ஓடிடும் 'தெதுறு'ஆற்றை
நடையினிற் கடந்துமற்றோர்
அதிசயம் நிகழ்த்திச்சென்றார்

புதியர்ஈர் குரவர்தம்மைக்
கண்டதும் அதிசயித்தார்

'ஜோசப்டீ மெனகல்'என்றும்
'ஜோசப்கர் வாலோ'என்றும்
சோதரி வயிற்றுதித்த
சூரிய சித்திரங்கள்
அவர்கள்வே றெவருமல்லர்
புனிதரின் மருமகர்தான்

பணிக்கென இருவர்தம்மை
அனுப்புமுன் அவர்கள்செய்யும்
பணியதற் கீடாயொன்றும்
பெறுவது கூடாதென்று
தனியொரு பாடஞ்சொன்னார்
தக்கமெய்க் குருவாய்நின்று
இனிவருங் குருக்களுக்கும்
அதுமுதற் பாடநூலாம்

மூப்பரண் ணாவியென்று
இருபெரும் பொறுப்புகட்கு
ஆட்களை அளந்தெடுக்கும்
முறையினைச் சொல்லிவைக்க
மூப்பரோ பூசைக்கென்று
ஆயத்தஞ் செய்வாரண்
ணாவியோ கோவில்தன்னை
நிர்வாகஞ் செய்துவைப்பார்

சாதியுங் குலமுமென்று
சன்னத மாடிநின்ற
ஆதிமெய்க் குடியைவெல்ல
அரும்படு பாடுபட்டு
நீதியில் இறைவனாட்சி
நிலைபெற வேண்டுமென்று
வேதியர் சொல்லிவைத்தார்
சாதிக்கோர் கோவிலென்று

இங்ஙனம் மனத்திலெல்லாம்
இடம்பிடித் தவரைக்கண்ட
இடத்திலே முழந்தாளிட்டு
வணங்கினார் மனிதரெல்லாம்
கொங்கணிச் சுவாமியின்மேல்
கொண்டநற் பக்திபின்னால்
அங்ஙனம் தொடர்வதற்கு
அவர்முதற் காரணிதான்

நைந்துபோய் இடையிற்றுஞ்சும்
நலிந்தஅத் துணியைவிட்டால்
சொந்தமென் றுரத்துச்சொல்ல
உலகிலே ஒன்றுமில்லா
புங்கவ ரவரைமண்ணில்
புனிதராய்ப் பேணிமக்கள்
வந்தனை செய்யமண்ணில்
வளமது பெருகக்கண்டார்

ஆறடி தானுமற்ற
அவரது ஞானந்தன்னை
ஆறறி வுள்ளதம்மால்
அளவிட முடியாதென்று
காலடி மண்ணைத்தொட்டுக்
கண்களில் ஒற்றிக்கொண்டு
காலமும் ஞானம்பெற்றோர்
கதைகளும் நிறையவுண்டு

– வளரும் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் நடைபெற்ற தேசிய கிறிஸ்தவ இலக்கிய விழா - 2010

புத்தசாசன மற்றும் மத விவகாரங்களுக்கான அமைச்சின் கிறிஸ்தவ விவகாரங்களுக்கான திணைக்களம் நடாத்திய **தேசிய கிறிஸ்தவ இலக்கிய விழா 2010** கடந்த ஒக்டோபர் மாதம் 8ம் திகதி (08.10.2010) வெள்ளிக்கிழமை மருதானை புனித யோசப் கல்லூரியின் உள்ளக விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது.

பிரதம அமைச்சரும் புத்தசாசன மற்றும் மதவிவகாரங்களுக்கான அமைச்சருமான மாண்புமிகு டி.எம்.ஜெயரத்ன அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திருத்தந்தையின் இலங்கைக்கான தூதுவர் ஆயர் ஜோசப் ஸ்பிரிற்றி, கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் உட்பட ஆயர்கள், குருக்கள், துறவிகள், ஏனைய கிறிஸ்தவ சபைக் குருக்கள், அதிகாரிகள், பொதுமக்கள், மாணவர்கள் உட்பட நாட்டின் பல மாவட்டங்களிலிருந்தும் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

மிகச் சிறப்பான வகையில் ஒழுங்கமைக் கப்பட்டிருந்த இவ்விழாவில் இடம்பெற்ற நடனங் கள், நாடகம், இசை போன்ற கலை நிகழ்வுகள் மிகுந்த உயர் தரத்தில் அமைந்திருந்ததோடு அனைவரது பாராட்டுகளையும் பெற்றுக் கொண்டன. திருமறைக் கலாமன்றம் - யாழ்ப்பாணத் திலிருந்து வருகை தந்த கலைஞர்களின் நாட்டிய நிகழ்ச்சி தமிழ்க் கலாசாரம் மணக்க அற்புதமாய் அமைந்திருந்ததோடு சிங்களக் கலைஞர்களின் நடனத்தின் நளினமும் ஒய்யாரமும் பார்வையாளரைக் கிறங்க வைத்தது. இவ்விழாவின் முக்கிய நிகழ்வாக கிறிஸ்தவக் கலை இலக்கியத் துறைகளில் பணிபுரிந்த அறுவருக்கு தேசிய விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மொழியில்:

பேரருட்தந்தை ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை

அருள்தந்தை மைக்கல் சில்வா

ஆங்கில மொழியில்:

திருமதி. மானெல் அபேரட்ன

திரு. பிரான்சிஸ் அல்மேடா

தமிழ் மொழியில்:

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மறையாசிரியரும் இசைக்கலைஞருமான திரு.மடுதீன் யேசுதாஸ் மட்டக்களப்பைச் சேர்ந்த கத்தோலிக்க தமிழ் வானொலி நிகழ்ச்சித் தொகுப்பாளரும் தொண்டன் இணை ஆசிரியருமான

எஸ்.எஸ்.யேசுதாஸ் (மலர்வேந்தன்)



ஆகியோர் இவ்வாறு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

இவ்விழாவுக்கு முன்னோடியாக கிறிஸ்தவ விவகாரங்களுக்கான திணைக்களம் தேசிய ரீதியில் மூன்று மொழிகளிலும் பேச்சு, குழுப்பாடல் மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடாத்தியிருந்தது. இப்போட்டிகளில் வென்றோருக்கான பரிசளிப்பும் இவ்விழாவில் இடம்பெற்றது. இப்போட்டிகளில் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் 15 பரிசுகளைப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு எமது பாராட்டுகள். இறுதியாக புத்தசாசன மற்றும் மத விவகாரங்களுக்கான அமைச்சின் கிறிஸ்தவ விவகாரங்களுக்கான திணைக்களம் இரண்டாவது தடவையாக நடாத்திய தேசிய கிறிஸ்தவ இலக்கிய விழா மிகச் சிறப்பாக நடந்தேறியது.

4ம் பக்கத் தொடர்ச்சி

பணிகளை முன்னெடுக்கவும் உரிய காலமாக இப்போதுள்ள காலத்தை நாம் பயன்படுத்த முன்நிற்க வேண்டாமா?

காலங்களும் நேரங்களும் நம்மையோ வேறு எவரையோ பார்த்துக்கொண்டு நிற்பதில்லை. அவை அவற்றின் பாட்டிற்கே ஓடிக்கொண்டு செல்கின்றன. நாமாகத்தான் அவற்றைப் பிடித்து உரிய வேளையில் பிறப்புக்கு ஒரு காலம் இறப்புக்கு ஒரு காலம் என்று நூலாசிரியர் கூறுகின்ற வேளையில் பிறப்புக்கும் இறப்புக்குமிடையே நல்லவைகள் செய்ய, நானிலம் சிறக்க வாழ எத்தனை காலமுண்டு, என்ன அவகாசமுண்டு என்று எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாகவுள்ளோம். வெறுமனே பிறப்பை மாத்திரம் சிந்தித்துக்கொண்டிருப்பதில் அதன் மாண்பை எண்ணி களித்துக்கொண்டிருப்பதில் பயனில்லை. மாறாகப் பிறந்தோம் - எம் பிறப்பால் பாருக்கு என்ன செய்தோம் என்று எண்ணிப் பார்க்கவேண்டும். எம் வாழ்வால் எத்தனை உள்ளங்களை பிறரன்புப் பணிக்குக் கவர்ந்திழுத்தோம்? எத்தனை பேரை எம் முன்னுதாரணப் பணியால், வாழ்வால் திருந்தி வாழ உதவி செய்தோம் என்று சிந்திப்போம். நம்மை வேகப்படுத்த காலங்கள் இருக்கின்றன. காலத்துள் நல்லவைகள் செய்து காலத்தை வென்றோன் முன் தலை நிமிர்ந்து நிற்க வாருங்கள். 'என் ஆசி பெற்றோரே உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஆயத்தம் செய்யப்பட்டுள்ள இடத்தினைச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்' என்ற அழைப்பைப் பெற எம்முன் காத்திருக்கும் காலத்தைப் பயன்படுத்துவோமாக.

யோ. பத்திநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல புனிதர்கள் திருநாள்



சகல புனிதர்கள் திருநாள், நெடுங்காலமாகத் திருச்சபையில் அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. சிறப்பாக கீழைத்தேசத்தில் அகில உலக வேதசாட்சிகள் தினமாக நினைவு கூரப்படுகின்றது. கி.பி 609ல் திருத்தந்தை பொனிபேஸ் vi, உரோமை மாநகரில் அன்னிய தெய்வங்களை வைத்து வழிபட்ட பெந்தயோன் எனும் ஆலயத்தை கிறிஸ்தவ ஆலயமாக, தேவதாய்க்கும் சகல வேதசாட்சிகளுக்குமாக பிரகடனப்படுத்தினார். இவ்வாறு செய்ததினால், அன்னிய தேவதைகளை வைத்து வழிபட்ட இடமானது, சகல புனிதர்களின் இடமாகத் திகழ வேண்டும் என்று பாப்பரசர் விரும்பினார் என புனித பேட் கூறுவார்.

"எனவே, திரண்டு வரும் மேகம் போல் இத்தனை சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து நிற்க எந்தச் சுமையையும், நம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் எந்தப் பாவத்தையும் உதறித்தள்ளிவிட்டு, நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவோமாக. நம்பிக்கையைத் தொடங்கி, வழி நடத்துபவரும் அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மீது கண்களைப் பதிய வைப்போம்"
(எபிரே. 12- 1-2)

ஆங்கிலேயரான அல்குயின், சகல புனிதர்கள் தினம் கார்த்திகை 1ல் கொண்டாடப்படுவது மிகவும் பொருத்தமானது என்றார். இந்நாள் மிகவும் நினைவு கூரப்படும் விதத்தில் வளர்ச்சியைக் கண்டது வட இங்கிலாந்தில். இந்த நாள் தனிப்பட்ட புனிதர்களை மட்டுமல்லாது இறைவனுக்காகவும், இறைவார்த்தையின் படியும் வாழ்ந்து இறையாசீரைப் பெற்றுக்கொண்டு இறைபதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்த அனைத்து நல்லான்மாக்களையும் நினைவு கூரும் நன்னாளாகத் திகழ்கின்றது. இறையன்பை நிறைவாகச் சுவைத்து இறை பிரசன்னத்தில், இறைபுகழ் இசைத்து நித்திய வாழ்வு பெற்ற இவர்களின் இத்திருநாள், மறுநாள் நினைவுகூரப்படுகின்ற சகல ஆன்மாக்கள் திருநாளோடு முழுமையடைகின்றது. இவர்களும் தம் வாழ்நாளில் நல்லதோர் ஓட்டத்தை ஓடி, இறைவனின் நித்திய அன்பின் அழைப்பிற்காக பொறுமையாக உத்தரிப்பு ஸ்தலத்தில் காத்திருப்பவர்கள். ஆகையால்தான், "எனவே, திரண்டு வரும் மேகம் போல் இத்தனை சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து நிற்க எந்தச் சுமையையும், நம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் எந்தப் பாவத்தையும் உதறித்தள்ளிவிட்டு, நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவோமாக. நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும் அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மீது கண்களைப் பதிய வைப்போம்" (எபிரே. 12: 1-2) எனப்படுகிறது.

"எமது பாதுகாவலர்களாக இருக்கும்படி சகல வேதசாட்சிகளையும் புனிதர்களையும் அழைப்போம்" என புனித ஜோன் கிறிஸோஸ்தம் கூறுகின்றார். மேலும் "இவர்களது திருநாளில் மட்டுமன்றி ஏனைய நேரங்களிலும் இவர்களை நம் உதவிக்கு அழைக்கலாம் ஏனென்றால், இவர்கள் உயிருடன் இருந்த போது கூறியதை விட, தம் மரணத்திலே கூறவல்லவர்கள், கிறிஸ்துவின் காயங்களை அவர்கள் தற்போது தரித்திருக்கிறார்கள்".

சகல புனிதர்களை முதல் நாளும், சகல ஆன்மாக்களை இரண்டாவது நாளுமாக நினைவு கூருகின்ற இந்தக் கார்த்திகை மாதத்தில் சகல எம் உறவுகளின் ஆன்மாக்களுக்காக பிரார்த்திக்க திருச்சபைத் தாயானவள் எம்மை அழைத்து நிற்கின்ற அதே வேளை, கொடிய யுத்த அரக்கனின் கரங்களில் அகப்பட்டு, அகோரமாக உயிர் பறிக்கப்பட்ட எம் ஒவ்வொரு சகோதர சகோதரிகளின் ஆன்ம சாந்திக்காகவும் மன்றாட அழைக்கப்படுகின்றோம்.

இரத்தம் சிந்திய அத்தனை ஆன்மாக்களும் இறைவனின் திருமுகத்தைக் கண்டு களிப்புற்றிருக்க வேண்டுவோம். புனித அலோசியஸ் கொன்சாக்கா கூறுவது போல் "விண்ணகத்தில் நாம் அனைவரும் மீண்டும் சந்தித்து மகிழ்வுடன் ஒன்றாக, நம் மீட்பருடன் அவர் புகழ் பாடி, அவரது இரக்கத்தில் என்றென்றும் நிலைத்திருப்போம்" இந்த நம்பிக்கையில் வாழும் நாம் நம் வாழ்வை இறையாட்சிக் கேற்றவாறு வாழ முயற்சிப்போம். புனிதர்கள் யாவரும் பிறக்கும் போது சாதாரணமாக நம்மைப் போலவேதான் பிறக்கின்றார்கள். பின்னர் தம் வாழ்நாளில் ஒவ்வொரு நிமிடமும் இறைவனின் அன்பின் அழைத்தலுக்கு முழு மனதுடன் ஆம் என்று பதிலளித்து தினமும் தம் செப தப வாழ்வாலும் ஒறுத்தல் முயற்சியினாலும் இறைவனுக்கு ஏற்புடையவர்களாகின்றனர். இவர்கள் தம் வாழ்நாளிலும் இறப்பிலும் இறையன்பிற்கு சாட்சியம் பகர்ந்ததனால், இன்று இவர்களை புனிதர்கள் என்று திருச்சபை அழைத்துச் சிறப்பிக்கின்றது.

"உன் பெயரென்ன?"

"சாட்சிநாதன்"

"தொழில்?"

"வழக்குகள்ல சாட்சி சொல்லுறது"

• மணி

ஆகையால், எம் திருச்சபையை காலத்திற்குக் காலம், துய்மைப்படுத்த இறைவன் எமக்களித்த புனிதர்களுக்கும் அவர்களை புனிதத்துவத்தில் வளர அருள்பொழிந்த இறைதந்தைக்கும் புகழ் கூறி, இறந்த சகல ஆன்மாக்கள் இறை சாந்தி பெற வேண்டுவோம். இது பூவுலகில் வாழும் விசுவாசிகளாகிய நம் ஒவ்வொருவருடைய கடமையாகிறது என்பதால் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவதோடு, இறையன்பிற்கும் அவர்தம் அழைப்பிற்கும் பதில் கொடுப்பவர்களாக மாற முயலுவோம்.

அருட்சகோதரி. யோகா scjm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டை முறிந்த வெண்புறா

இன்றைய நாளிலே
வெண்புறாவொன்று
எல்லோரிடமும்
ஏதேதோ சொல்லிச் சொல்லி
கத்திக் கதறியது
அதன் முட்டைகளை
காகங்கள் குடித்ததாகவும்
மனிதனொருவன் செட்டையில்
கல்லால் அடித்ததாகவும்
கண்ணீர் விட்டது

தாண்டத் தாண்ட
எல்லைக் கோட்டைத் தள்ளிக் கீறினால்
எப்போதும் ஜனநாயகம்
எல்லைக்குட்பட்டதாகவே
இருக்குமென்பதை
இருவிழி சொரியும்
கண்ணீரோடு சொன்னது

சாந்தமாய்ச் சென்றே
சத்தமிட்டு அதனிடம்
சமாதானம் கொஞ்சம் தாராயோ
என்று கேட்டேன்
ஓவென்று ஓங்கியழுதது
யார் யாரோ வந்து
அதைப்பிடுங்கி
ஆழப் புதைத்துவிட்டார்களாம்
எனக்கும் இல்லாத அதை
எப்படியப்பா தரமுடியும்?
ஏங்கியழுதது
எனக்குள் இடி விழுந்தது

புதைகுழி மேட்டுமண்ணில்
முட்கம்பிச் சிறைகளுக்குள்
பறவைகள் சத்தமின்றி
பயத்துடன் விடிகிற பொழுது
முழங்காத துப்பாக்கிகள்
எங்குமே உலவுகின்றன

ஊனர்களாயும்
ஊத்தைகளாயும்
ஒடுங்கிய உடலர்களாயும்
சோகத்தின் சுவடுகளுடன்
சோர்ந்து கிடந்தார்கள்
மனிதர்கள்

விதியென்பதா வினையென்பதா
சதியென்பதா
சக்தியற்றோம் என்பதா
கழுத்திலே காயத்துடன்
செட்டை முறிந்த கோலத்தில்
தேம்பியழுத வெண்புறா
திசைதெரியாத் தேசம் நோக்கி
பறந்துபோனது

கவிஞர் பைந்தமிழ்க் குமரன் ஜேடேவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகரைவாணன்

ஒரு கலைக் கோயிலும்

வரலாற்றுச் சிறுகதை

உலகை இறுகக் கௌவிப் பிடித்துக்கொண்டிருந்த 'இரண்டாம் மகாயுத்தம்' என்னும் பேரிருளை முற்றாக அழித்துவிட்டு, சமாதானம் என்னும் ஒப்பற்ற ஒளி வீசுவதற்கு இன்னும் சில மணித்தியாலங்களே இருக்கின்றன. அதை எதிர்பார்த்து எங்கும் ஒருவித பரபரப்பு. மனதில் மகிழ்ச்சி வெள்ளம்.

வரலாற்றின் மிக முக்கியமான அந்தச் சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பு தேசத்தின் கல்வி வளர்ச்சியில் ஒரு பெரும் திருப்பத்தை உருவாக்கிய பேடினன் பொனல் என்னும் புரட்சித் துறவி வழக்கம்போல தரையில் விரிக்கப்பட்டிருந்த சாதாரணமான ஒரு பண்பாயில் தலையணை தானும் இன்றி ஒரு தரித்திரனாக மீளாத் துயிலில் ஆழ்ந்திருக்கின்றார்.

திட்டமிட்டு மெல்ல மெல்லத் தான் கட்டியெழுப்பிய புனித மிக்கேல் என்னும் பிரமாண்டமான கலைக் கோயிலின் ஓர் அறையில் வொனல் என்னும் ஓர் அற்புதமான சிற்பி உயிரற்ற உடலானதைத் தாங்கிக்கொள்ள இயலாத மாதா கோயிலின் வெண்கல மணிகள் கதறி ஆர்ப்பரிக்கின்றன. அந்த ஆர்ப்பரிப்பு அந்தோனியார் கோயிலிலிருந்தும் எழுந்து காதைச் செவிடாக்குகிறது.

இரண்டு கோயில்களிலிருந்தும் எதிர்பாராத விதமாக எழுந்த அமங்கல ஒலியினால் மட்டக்களப்பு புளியந்தீவு முழுவதும் அந்த வைகாசி மாத இரவுப் போதில் அதிர்ச்சியில் உறைந்து போகின்றது.

எண்பது வயதைக் கடந்துவிட்ட வெண்தாடி வேந்தரான அந்தப் பிரென்சு நாட்டுத் துறவியின் பிரிவால் மட்டக்களப்புத் தமிழகம் முழுவதும் மரணவீடாகின்றது. கறுப்புக் கொடிகள் காட்சியாக வீதிகள் அனாதையாகின்றன.

மாணவக் குழந்தைகள் தங்கள் சொந்தத் தந்தையை இழந்துவிட்டதுபோல கொப்பி புத்தகங்களைத்


அகண் சறுபியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கி எறிந்துவிட்டு அழுது புலம்புகின்றன. ஆசிரியர்கள் ஓர் உன்னதமான வழிகாட்டியை இழந்துவிட்ட துயரில் ஆழ்ந்து போகின்றனர். கல்வித்துறை கணவனை இழந்த மனைவியாகின்றது.

வெறுந்தரையில் விரிக்கப்பட்ட பாயில் நீட்டி நிமிர்ந்து நிம்மதியாகப் படுத்துறங்கும் துறவியின் அப்பழுக்கற்ற முகம் தனது குரு இயேசுவைப் போன்று 'என்னிடம் தரப்பட்ட எல்லாப் பணிகளும் நிறைவு பெற்றுவிட்டன' என்று சொல்வதுபோல் தோற்றம் தருகின்றது. மக்கள் அந்த முகத்தைப் பார்த்துப் பார்த்தே தங்கள் மார்பிலும் முகத்திலும் அறைந்து கொள்கின்றனர்.

தனது நாட்டவரும் தன்னோடு நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மறைப் பணியிலும் கல்விப் பணியிலும் தனது வாழ்க்கை முழுவதையும் கரைத்துக் கொண்டவருமான பொனல் அடிகளாரின் சலனமற்ற முகத்தை வெகுநேரமாக உற்றுப் பார்த்துக்கொண்டு நின்ற திருகோணமலை மறைமாநில ஆயர் காஸ்ரன் றொபின்சன் ஆண்டகையின் கண்கள் ஈரமாகின்றன.

பழுத்த துறவியான தன்னை சராசரி மனிதனுக்கேயுரிய பற்றும் பாசமும் பலவீனமாக்கிவிட்டதை உணர்ந்த ஆயர், அதற்காக வெட்கப்பட்டவராக அறையை விட்டு வெளியே வந்து அங்கே கிடந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொள்கின்றார். அவர் மனம் நிகழ்காலத்திலிருந்து நீங்கி, கடந்த காலத்தினுள் பிரவேசிக்கின்றது.

பிரென்சு நாடு என்றதும் போனபாட் நெப்போலியனின் பெயரே படியாதவர்கள் மனதிலும் நிழலாடும். ஐரோப்பிய நாடுகளுக்கு ஓர் ஆச்சரியக் குறியாக விளங்கிய அந்த மாவீரனின் மண்ணில் பிறந்து வளர்ந்து இயேசுசபைத் துறவியான வொனல் அடிகளார் இருபதாம் நூற்றண்டின் ஆரம்பத்தில் மறைப்பணி ஆற்றுவதற்காக புளியந்தீவில் காலடி வைத்தபோது, அது பூரிப்போடு இருகரம் நீட்டி அவரை வரவேற்றது.

அந்நிய மண்ணில் நற்செய்தியைப் போதிக்க வந்த அடிகளார், அப்பணி இலகுவாக அமைய, தமக்கு முன் தமிழகம் வந்து சமயப் பணியும் பின்பு தமிழ்ப் பணியும் ஆற்றிய வீரமாமுனிவர், தத்துவ போதகர் வழியில் தமிழில் ஓரளவேனும் தேர்ச்சி பெறவேண்டும் என்று விரும்புகின்றார். அவரது வார்த்தைப்படி தமிழும் அவர் வாயில் அமுதமாக இனிக்கின்றது.

தமிழோடு நன்கு பரிச்சயமாகிவிட்ட பிரென்சுத் துறவியின் சமயப் பணி கிழக்கிலங்கை எங்கும் மாட்டுவண்டில், சைக்கிள் என்னும் பல்லக்குகளில் வெற்றிநடை போடுகின்றது. சில சமயம் கரடுமுரடான, மேடு பள்ளம் நிறைந்த பாதைகளில் அடிகளார் 'பொடிநடை' போடுவதைக் காணும் மக்களுக்கு அவர் ஓர் அதிசயமாகவே தோற்றம் தருகின்றார்.

ஆயரின் விருப்பத்திற் கமைய அடிகளார் மறைப்பணி ஆற்றினும் அவர் உள்ளம் கல்விப் பணியையே நாடுகிறது. நன்கு கற்ற அடிகளாரின் இந்த நாட்டத்திற்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரான்சிஸ் சேவியர் என்னும் மற்றுமொரு கத்தோலிக்கத் துறவியால் இருபதாயிரம் ரூபா செலவில் புளியந்தீவில் அமைக்கப்பட்ட மூன்று பாடசாலைகளில் ஒன்றான புனித மிக்கேல் ஆங்கிலப் பாடசாலை களம் அமைத்துக் கொடுக்கும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை.

மிகச் சிறியதொரு கட்டிடத்தில் கரம்பன் யோசப் ஆபிரகாம் என்பவரைத் தலைமை ஆசிரியராகக் கொண்டு இயங்கிய அப்பாடசாலையை, பிரென்சு



குறும்(புப்)பா - 51

சுந்தரனார் படம்பார்க்கச் சென்றார்
சுழன்றிடி வாங்கிப்பின் சொன்னார்
மந்திரமாய் மாயமாய்ச் செய்தவிளை யாட்டையின்று
'எந்திரனாய்' இவர்செய்தார் ஹி!ஹி!

~ மலர் ~

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் பிரபல்யம் பெற்று விளங்கும் ஒரு கல்லூரி போன்று அமைக்கவேண்டும் என்னும் ஆசை அடிகளாரை ஆட்கொள்கின்றது. அந்த ஆசையை திருகோணமலை மறைமாநிலத்தின் அன்றைய ஆயர் சாள்ஸ் லாவின் யேயின், மட்டக்களப்பில் அமைக்கப்படும் கல்லூரி மற்றக் கல்லூரிகளுக்கு இரண்டாவதாக இருக்காது என்னும் உறுதியான வார்த்தை மிகப் பெரிதாகத் தூண்டிவிடுகின்றது.

பொனல் அடிகளாரின் தீர்க்கமானதும் நிதானமானதுமான செயற்பாட்டிற்கு ஆயர் மட்டுமின்றி கிழக்கிலங்கை அரச அதிபர், மாட்ட நீதிபதி ஆகியோரும் மட்டக்களப்பு மண்ணின் முக்கிய பிரமுகர்களான வன்னியனார், உடையார், முதலியார் என்போரும் மகிழ்ச்சியோடு கை கொடுக்கின்றனர். அடிகளாரின் ஆசை செயல்வடிவம் பெற ஆரம்பிக்கின்றது.

மட்டக்களப்பு மண்ணின் மங்கலமான இந்தக் கலைக் கோயிலைக் கட்டி எழுப்புவதில் இளந்துறவி யோசப் றைற் காட்டிய ஆர்வமும் அக்கறையும் அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கின்றன. ஆங்கிலேயரான அந்தத் துறவி கலைக் கோயிலின் பொறியியலாளராக, மேசனாக, தச்சனாக பல்வேறு அவதாரங்களை எடுத்தபோது 'வெள்ளைக்காரக் கூலி' என்று அவரை விமர்சனம் செய்த சுதேசிகளின் வாய் அடங்கிப் போகின்றது.

புளியந்தீவின் மத்தியில் பிரமாண்டமாக வான் நோக்கி எழுந்துகொண்டிருந்த கலைக் கோயிலுக்கு பெரும் பணச்செலவு ஆவதைக் கவனித்த பொதுமக்களில் டென்காம் போன்றோர் இரண்டாயிரம், மூவாயிரம் என நன்கொடைகளை வழங்குகின்றனர். ஆயினும் அப்பணம் போதாமையால் அங்கும் இங்கும் கடன் வாங்கிய பொனல் அடிகளார் தான் பிறந்த நாட்டிடம் கையேந்துகின்றார். 'கேளுங்கள் கொடுக்கப்படும்' எனும் இயேசுவின் வார்த்தை உண்மையாகின்றது.

கலைக்கோயிலின் நிர்மாணத்திற்குத் தேவையான சீமெந்து முதலான பொருட்கள் காலி, கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து கடல் மார்க்கமாகவே வந்து சேருகின்றன. பொதுமக்கள் அவற்றைப் புளியந்தீவுக்கு எடுத்துச் செல்வதற்கு வேண்டிய ஒத்துழைப்பை நல்குகின்றனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இந்த மண்ணில் வாழ்ந்துவரும் தமிழ் மக்கள் தாம் இதுவரை காணாத ஒரு பெரும் கலைக்கோயில் புனித மிக்கேல் கல்லூரி எனும் பெயரில் தோற்றம் பெறுவது கண்டு எல்லாப் புகழும் பொனல் அடிகளுக்கே என்று கூறிப் பெருமைப்படுகின்றனர். ஆனால், எல்லாப் புகழும் இறைவனுக்கே என்று கூறி அடிகளார் தன்னை ஒரு சாதாரண மனிதனாக்கிக் கொள்கின்றார்.

ஒருநாள் இரவு புளியந்தீவு வித்தியாசமான வெளிச்சத்தில் துலங்குவது கண்டு தமது கண்களை புனித மிக்கேல் கலைக் கோயில் பக்கம் மக்கள் திருப்புகின்றனர். அங்கே ஜெகஜோதியாக மின்குமிழ்கள் எரிந்துகொண்டிருக்கின்றன. மட்டக்களப்புத் தமிழகத்தில் முதல் முறையாக பிரகாசித்த இந்த வெளிச்சம் அதன் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பிடித்துக்கொள்கிறது.

புனித மிக்கேல் கல்லூரி புளியந்தீவில் ஒரு பெரும் கலைக்கோவிலாகத் திகழ்கின்றது. அந்தக் கோவிலின் மூல விக்கிரகமாக பொனல் அடிகளார் ஓர் அறையில் அமர்ந்திருக்கின்றார். அவரின் அற்புதமான நிர்வாகத்தில் கேம்பிறிட்ஜ் பரீட்சையில் மாணவர்கள் வெற்றிக்கொடி நாட்டுகின்றனர். கல்வியைப் போன்று விளையாட்டுத் துறையிலும் அவர்களின் கைவரிசை தெரிகின்றது. இவை அனைத்திற்கும் மேலாக மாணவரின் ஒழுக்கம், ஆசிரியர்களின் கடமை உணர்வுகள் பொதுமக்களை வியக்க வைக்கின்றன. இந்தச் சிறப்புகள் புனித மிக்கேல் என்னும் கலைக் கோயிலை உரோமாபுரி - புனித பீற்றர் பேராலயமாக எழுந்துநிற்கச் செய்கின்றன.

இறந்தகால நிகழ்வுகளில் தனது மனதைத் தோயவிட்டுக் கொண்டிருந்த ஆயர் திடீரென விழித்துக்கொண்டவராய் இருக்கையை விட்டெழுந்து அருகில் உள்ள தனது இல்லம் நோக்கி நடக்கின்றார். அந்த நடை அவரின் வயதினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் மரிய சேவியர் அடிகளாருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம்

கலைவழி சமயப் பணியும் சமூகப் பணியும் ஆற்றிவரும் அறிஞரும் பன்முகக் கலைஞருமான பேராசிரியர் மரியசேவியர் அடிகளாருக்கு யாழ் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

இன மத பேதங் கடந்து நாட்டின் பல பாகங்களிலும் கிளை விரித்து நிற்கும் திருமறைக் கலாமன்றத்தை நிறுவி வழிநடத்தி வருவதோடு கலைத் தூதராக உலகின் பல நாடுகளுக்கும் சென்று மன்றத்தின் கிளைகளை நிறுவி இவைகளினூடாக சமூக மேம்பாட்டுக்காகவும் சமாதானம் மற்றும் மனிதநேயம் மிக்க சமுதாய உருவாக்கத்துக்காகவும் அடிகளார் ஆற்றி வருகின்ற பணிகள் போற்றுதற்குரியவையாகும்.

இறையியல், வரலாறு, சைவ சித்தாந்தம் போன்றவற்றில் பல்கலைக்கழக மட்டத்தில் பல்வேறு பட்டங்களைப் பெற்றுள்ள அடிகளார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் வித்துவான் பட்டமும் பெற்றவர். அவரது அறிவு, ஆற்றல், கலைத்திறன், ஆளுமை, உழைப்பு போன்றவைகளின் கனிகளாக யாழ் நகரிலும் நாடெங்கிலும் கடல் கடந்தும் பல்வேறு நிறுவனங்களும் கலைக்கூடங்களும் கலைக் கல்லூரிகளும் இயங்கி வருகின்னறன. தவக்காலத்தில் இடம்பெறும் பாஸ்கா நாடகங்கள் இவரது தயாரிப்பிலும் வழிநடத்தலிலும் பெரும் புகழ் பெற்றன. அனைத்து இன மக்களுடனும் அன்புறவு கொண்டு சமூக மேம்பாட்டுக்காகவும் சமாதான சகவாழ்வுக்காகவும் கலைவழி அரும்பணியாற்றும் பேராசிரியர் மரிய சேவியர் அடிகளாருக்கு யாழ் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது மிகவும் பொருத்தமானது மட்டுமன்று அடிகளாரை அறிந்த அவைருக்கும் மிகுந்த மகிழ்ச்சியையும் நிறைவையும் தருகின்ற நிகழ்வுமாகும்.

ஏற்பட்ட தளர்ச்சியை மட்டுமின்றி இனிய நண்பரின் பிரிவு உண்டாக்கிய சோகத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

தனது நெடிய வாழ்க்கையில் எத்தனையோ யாத்திரைகளை மேற்கொண்ட பேடினன் பொனல் அடிகளாரின் இறுதி யாத்திரைக்கான ஏற்பாடுகள் மாதா கோயிலில் இடம்பெறுகின்றன. இன்னும் சிறிது நேரத்தில் ஆயர் தலைமையில் துக்கப்பாடல் பூசை நடைபெறப்போகிறது என்பதை அறிந்த மக்கள் கடல் அங்கே சங்கமிக்கின்றது.

புனித மிக்கேல் எனும் பெயர் பூண்ட கலைக்கோயிலில் இருந்து அதன் புகழ்பெற்ற சிற்பியின் பூதவுடல் துறவிகள், குருக்கள், கன்னியாஸ்திரிகள் புடைசூழ மாதா கோவிலுக்கு ஊர்வலமாக எடுத்துவரப்படுகின்றது. அந்த ஊர்வலத்தில் அவரது தமையனாரும் இயேசுசபைத் துறவிமான சாள்ஸ் பொனல் அடிகளார் தட்டுத் தடுமாறி நடந்துவருவதைக் கண்ட ஒருவர் ஓடிவந்து தாங்கிக்கொள்கிறார்.

ஆயர், றொபின்ஸ் தலைமையில் லத்தீன் மொழியில் 'றெக்கியும் மாஸ்' இடம்பெற்று பூதவுடல் ஆசீர்வதிக்கப்பட்டதும் ஆலயத்திற்கு வெளியே பக்தி பூர்வமாக எடுத்துவரப்பட்டு 'ஆலையடிச்சோலை' என்னும் அந்திமத் தலத்தை நோக்கி மெதுவாக நகர்கிறது. தன்னை உருவாக்கிய தன்னலமற்ற சிற்பியின் இறுதி யாத்திரை ஆயர் தலைமையில் ஆரம்பமாவதைக் கண்ட் அவரது கலைக்கோயில் அரைக் கம்பத்தில் கட்டுண்டு கிடந்த நீல வண்ணக் கொடி, கட்டில் இருந்த தன்னை விடுவித்துக்கொண்டு 'சென்று வா' என்று சொல்வது போல் அசைந்து விடை கொடுக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குடும்ப துணை அங்கத்தவர் அருள்தந்தை ஜேக்கப் நீக்கிலாஸ் அவர்களுடன் ஒரு நேர்காணல்

திருக்குடும்ப துணை அங்கத்தவர்களை ஊக்குவிக்கவும், ஆன்மீக அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும் அண்மையில் யாழ் மறைமாவட்டத்திலிருந்து மட்டக்களப்புக்கு வந்திருந்த குழுவில் இடம்பெற்றிருந்த அருள்திரு ஜேக்கப் நீக்லாஸ் அவர்களுடன் இடம்பெற்ற செவ்வி...

தங்களது மட்டுநகர் வருகையின் நோக்கம் யாது?

திருமலை - மட்டுநகர் மறைமாவட்டத்திலே 10 குருக்கள் திருக்குடும்ப துணை அங்கத்தவர்களாக இணைந்திருப்பதால் இவர்களை ஊக்குவிக்கும் முகமாக அருட்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம், அருட்சகோதரி அருள் (திருக்குடும்ப சபை) ஆகியோருடன் இங்கு வந்தோம். செப்டம்பர் 20, 21 ஆகிய திகதிகளிலே இவர்களுக்கு ஆயர் இல்லத்தில் திருக்குடும்ப துணை அங்கத்துவம், திருக்குடும்ப ஆன்மீகம் ஆகியவை பற்றி விளக்க உரைகளும் உரையாடல்களும் இடம்பெற்றன.

திருக்குடும்ப துணை அங்கத்துவம் என்றால் என்ன?

பிரான்ஸ் நாட்டிலே போர்டோ மறைமாவட்டத்தின் குருவான பீற்றர் வியன் வெனு என்பவர் 1820ம் ஆண்டு திருக்குடும்பச் சபையை நிறுவினார். இந்தச் சபையிலே ஐந்து வகையான அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

01. அப்போஸ்தலிக்க அருட்சகோதரிகள்
02. தியான யோக சபை
03. அர்ப்பணித்த பொதுநிலையினர்
04. சாதாரண பொதுநிலையினர்
05. துணை அங்கத்துவக் குருக்கள்

இவை ஐந்தும் ஒரே நோக்கினை இலக்காகக் கொண்டு திருக்குடும்பத்தின் ஆன்மீகத்தைப் பின்பற்றி வாழ அர்ப்பணித்த அமைப்புகளாகும். மறைமாவட்டக் குருக்கள் திருக்குடும்ப துணை அங்கத்தவர்களாக இணைந்து இவ்வான்மீகத்தைப் பின்பற்ற அழைப்புப் பெறுகின்றனர். குருத்துவ அழைத்தலை ஆழப்படுத்தி ஆன்மீக வளர்ச்சியிலே நிறைவினைக் காண திருக்குடும்ப ஆன்மீகம் துணை நிற்கிறது.

பீற்றர் பியன் வெனு எந்த நோக்கத்திற்காக இவ்வமைப்புகளை ஏற்படுத்தினார்?

பிரான்ஸ் புரட்சியின் பின்பு நாடு சீரழிந்து காணப்பட்டது. சமுதாயச் சீர்கேடுகள், ஆன்மீகம் குன்றிய தன்மை, வறுமை, கல்வியின்மை போன்ற குறைபாடுகள் நிறைந்து காணப்பட்டன. இந்தச் சவால்களை இனங்கண்டவராக காலத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையினை உணர்ந்து கைகொடுக்கும் ஒரு சிறந்த கருவியாக வியன் வெனு அடிகள் திகழ்ந்தார். எங்கெங்கு தேவைகள் ஏற்பட்டதோ அங்கெல்லாம் சிறிய குழுக்களை ஏற்படுத்தி அவர்கள் திருக்குடும்ப ஆன்மீகத்திலே வேர் ஊன்றியவர்களாக மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யத் தம்மை அர்ப்பணித்தனர். 'இறைவன் மாத்திரமே' என்ற குறிக்கோளோடு ஏழ்மை, பற்றற்றதன்மை, எளிமை ஆகிய திருக்குடும்பத்தின் பண்புகளை மையமாகக் கொண்டு ஒரு குழுமமாகத் தம்மை அர்ப்பணித்து வாழ அழைக்கப்பெற்றனர்.

நீங்கள் இவ்வமைப்பில் இணைந்து கொண்டதன் காரணங்கள் யாவை?

திருக்குடும்ப சபை அருட்சகோதரிகள் எமது பல பங்குகளிலே வாழ்ந்து வருகின்றனர். அர்ப்பணமுள்ள இவர்களது பணியும் வாழ்வும் என்னைக் கவர்ந்தது. அவர்களது எளிமையான வாழ்வும் கடினமான பணியும் சேவை மனப்பான்மையும் குறிப்பாக ஏழைகளுக்குப் பணிபுரியும் ஆர்வமும் தியாக வாழ்வும் எனக்கொரு முன்மாதிரிகையாக இருந்தது. மறைமாவட்டக் குருக்கள் திருக்குடும்ப சபையின் துணை அங்கத்தவர்களாக இணைய முடியும் என்பதை இவர்கள் எமக்கு அறியத் தந்தார்கள்; இணையுமாறும் ஊக்கப்படுத்தினார்கள். எனவே, திருக்குடும்பத்தின் ஆன்மீகத்தை அறிந்து அதைப் பின்பற்றிப் பயன்பெறும் பொருட்டு நான் இவ்வமைப்பில் இணைந்துகொண்டேன்.

இலங்கை நாட்டில் இவ்வமைப்பு வளர்ச்சி கண்டுள்ளதா?

திருக்குடும்ப துணை அங்கத்துவக் குருக்கள் ஏறக்குறைய எல்லா மாவட்டங்களிலும் காணப்படுகின்றனர். 35 குருக்கள் தங்களை அர்ப்பணம் செய்து திருக்குடும்ப ஆன்மீகத்தைப் பின்பற்றுகின்றனர். இன்னும் சிலர் தங்களை அர்ப்பணம்செய்துகொள்ள ஆயத்தமாகுகின்றனர். அண்மைக் காலங்களிலே இவ்வமைப்பு பெரும் வளர்ச்சியைக் கண்டிருப்பது மகிழ்ச்சியைத் தருவதாக அமைந்துள்ளது.

உலகளாவிய ரீதியில் இவ்வமைப்பின் நிலைப்பாடு என்ன?

ஐரோப்பா, ஆசியா ஆகிய கண்டங்களிலே 60க்கு உட்பட்ட துணை அங்கத்துவ குருக்கள் இருக்கின்றார்கள். இரு சந்தர்ப்பங்களில் சர்வதேச ரீதியில் பிரதிநிதிகளாக ஒன்றுகூடும் வாய்ப்பு ஏற்பட்டது. உரோமாபுரியில் நடைபெற்ற திருக்குடும்ப சபையின் மாநாட்டில் துணை அங்கத்துவ குருக்களும் பங்குபெறும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. வெகு விரைவில் இவ்வமைப்பு சர்வதேச ரீதியாக இயங்கும் ஓர் அமைப்பாக மாறும்.

இவ்வமைப்பின் ஊடாக நீங்கள் மறைமாவட்டக் குருக்களுக்குக் கூற விரும்புவது என்ன?

அனேகமாக மறைமாவட்டக் குருக்கள் பங்குகளிலே பணியாற்றுகின்றனர். சிலவேளைகளிலே தனிமைப்படுத்தப்பட்ட ஓர் ஆன்மீக வாழ்வைக் கடைப்பிடிக்கும் சூழ்நிலை ஏற்படுகின்றது. பங்கு என்பது பெரிய குடும்பம். ஆனால், ஒரு குடும்பம் என்ற உணர்வு காணப்படுவது அரிதாக உள்ளது. துறவிகளைப்போல மறைமாவட்டக் குருக்கள் குழுமமாக ஆன்மீகத்தைக் கட்டியெழுப்பும் வாய்ப்புகள் குறைவாய் உள்ளன. ஒரு குருவின் வாழ்வுக்கும் பணிக்கும் திருக்குடும்ப ஆன்மீகம் ஒரு சிறந்த மாதிரிகையாக விளங்குகின்றது. இந்த மாதிரிகையைக் கடைப்பிடிக்கும் குழுக்களோடு ஒரு குழு இணையும்போது ஒரு குழுமத்தைப் பக்க பலமாகக் கொண்டவராக, இறைவன் மாத்திரமே என்ற நோக்கோடு தன் ஆன்மீகத்தை ஆழப்படுத்தி அர்ப்பணத்தோடு செயற்பட வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்த ஆன்மீகத்தை மட்டுந்தான் கட்டாயமாக எல்லாரும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நியதியில்லை. ஒரு குரு திருக்குடும்ப ஆன்மீகத்தைப் பின்பற்ற அழைப்புப் பெறும்போது அவர் சுயாதீனமாகத் தன்னை அர்ப்பணித்து ஒரு சபைக்குரிய உரிமையோடு ஆன்மீக பலம் கொண்டவராக வாழ முடியும். எனவே, இது ஓர் ஆன்மீகத் தேடலாக அமைகிறது. இத்தேடலுக்குத் திருக்குடும்பம் எமக்குத் துணையாய் இருக்கின்றது. 'வந்து பாருங்கள்' என்ற ஓர் அழைக்கும் குரலைக் கேட்பதற்கு உள்ளம் திறந்து செபிப்போம்.

செவ்வி கண்டவர்:

அருட்தந்தை A.A. நவரெட்ணம்
திருக்குடும்ப துணை அங்கத்தவர் அமைப்பின் இணைப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் இல்லாத உலகம் நரகமாகிவிடும் - திருத்தந்தை



சமுதாயம் மற்றும் திருச்சபையின் வருங்காலமாக இருக்கின்ற இளையோர் நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் தந்தையாகிய இறைவனில் தங்கள் நம்பிக்கையைப் பலப்படுத்த வேண்டும் என்று திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் கூறினார். 2011ம் ஆண்டு ஆகஸ்ட் 16 முதல் 21 வரை ஸ்பெயினின் மத்ரித் நகரில் கொண்டாடப்படவிருக்கும் 26வது உலக கத்தோலிக்க இளையோர் தினத்திற்கென வெளியிடப்பட்டுள்ள திருத்தந்தையின் செய்தியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஐரோப்பா தனது கிறிஸ்தவ வேர்களை மீண்டும் கண்டுணரவேண்டிய பெரும் தேவை ஏற்பட்டுள்ள இக்காலத்தில் இந்த மத்ரித் கூட்டம் "இயேசுக் கிறிஸ்துவில் வேரூன்றி, கட்டியெழுப்பப்பட்டவர்களாய் நம்பிக்கையில் உறுதியாக நில்லுங்கள் - கொலோ 2:7" என்ற புனித பவுலின் வார்த்தைகளைத் தலைப்பாகக் கொண்டு நடைபெறுகின்றது என்று திருத்தந்தை தனது செய்தியில் கூறியுள்ளார். வேரூன்றுதல், கட்டியெழுப்புதல், உறுதியாக இருத்தல் ஆகிய மூன்று சொற்கள் வெளிப்படுத்தும் ஆழமான கருத்துகளை விளக்கியுள்ள திருத்தந்தை, கிறிஸ்துவைச் சொந்த நண்பராகப் பாவித்து அவரின் வார்த்தையின்படி ஒவ்வொரு நாளும் வாழுமாறு இளையோருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கடவுளைத் தங்கள் சொந்த வாழ்விலிருந்தும் சமூகத்திலிருந்தும் ஒதுக்கி வாழும் இவ்வுலகப் போக்கில் கிறிஸ்தவர்கள், குறிப்பாக இளையோர் தங்களை இழந்துவிடாமல் வாழக் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை. கடவுள் இல்லாத உலகு நரகமாக மாறிவிடும். அதாவது தன்னலம், பிரிந்த குடும்பங்கள், தனிமனிதருக்கிடையேயும் நாடுகளுக்கு இடையேயும் காழ்ப்புணர்வு, அன்பு, மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கைப் பற்றாக்குறை ஆகியவை நிறைந்த நரகமாக உலகு இருக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

மாறாக, எங்கெல்லாம் தனிமனிதரும் நாடுகளும் கடவுளின் பிரசன்னத்தை ஏற்று, அவரை உண்மையில் வழிபட்டு, அவரது குரலைக் கேட்டு வாழ்கிறார்களோ அங்கெல்லாம் எல்லாரின் மாண்பும் மதிக்கப்படும் அன்புக் கலாசாரம் கட்டியெழுப்பப்படுகிறது என்று தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட்.



குறும்(புப்)பா - 52

கல்வியிலே பட்டங்கள் நூறு
காண்கின்ற நடத்தைமுழு மாறு
செல்வங்கள் செல்வாக்குக் கல்விக்குள் புகுந்ததனால்
சிந்தனையில் படிந்ததடா சேறு

~ மலர் ~

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராத

"ஜக்சன், மனே ஜக்சன்... எழும்பன்"

என் மருமகள் தன் மகனை எழுப்பும் ஒலி, ஐந்து மணிக்கே எழுந்து வீட்டுக்கு வெளியே நின்றுகொண்டிருந்த என் காதுகளில் விழுந்தது. பேரன் இதற்கு என்ன சொல்கிறான் என்பதையறிவதில் என் காதுகள் கூராகின.

"என்னம்மா... இப்பதானே நித்திரை கொண்டனான். அதுக்குள்ள எழுப்புறிங்களே..."

எனக்கு உள்ளுக்குள் சிரிப்பு. என்பேரன் ஜக்சன் கூறிய 'இப்பத்தானே' எனும் சொல்லின் பொருள் இரவு எட்டரை மணி. ஒன்பது மணிவரைகூட இருந்து படிக்கமாட்டாதவன் இவன்.

விடுமுறை நாட்களில் நான் வேண்டுமென்றே மனைவியிடம் என்னை எழுப்பவேண்டாம் என்று சொல்லி வைப்பேன். ஆனால், ஐயா ஏழு மணிக்கு மேல்தான் எழும்புவார்.

சிந்தனைகள் என்னை எனது சிறு பராயத்துக்கு இட்டுச் செல்கின்றன. என் தந்தை ஓர் அதிபராக இருந்தவர். ஐந்து மணிக்கே துயில் நீங்கி எழுந்து விடுவார். ஐந்தரை மணிக்கு மேல் என்னையும் என் சகோதரி மற்றும் இரு சகோதரர்களையும் படுக்கையில் விடமாட்டார். கைகளில் சொடுக்குப் போட்டு, அந்த நுண்ணிய ஒலி எம்மை வந்தடைந்து எழுப்பும்வரை விடவே மாட்டார். அதுவே எமது அலாரம். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற மூதுரைக்கு ஒப்ப எமது பங்கு ஆலயத்தில் நடைபெறும் ஆறுமணித் திருப்பலிக்கு அனுப்பிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார். மாலை வேளைகளில் இரவு ஏழரை மணிக்கு அம்மா வந்து திருச்செபமாலை செபிக்க அழைக்கும் வரை படிப்புத் தொடரும். இரவு ஒன்பதுமணி வரை ஏதாவது வீட்டு வேலைகளைச் செய்து முடிக்கலாம். இதுவே எனது வழக்கமுமாகிவிட்டது.

நான் உயர்தர பரீட்சைக்கு ஆயத்தமாகுகையில் அதிகாலையில் எழத்



தொடங்கிவிட்டேன். பின் பல்கலைக்கழகத்திலிருக்கையில் சற்று வித்தியாசமாக இரவு பன்னிரண்டு மணிவரை கண்விழித்துப் படிப்பேன். இப்போது நான் ஒரு கல்லூரி அதிபர். ஐந்து மணிக்கெல்லாம் விழித்து விடுகிறேன். என் தந்தையின் வழிநடத்துதல் எனக்குதவியதை நினைத்துப் பெருமைப்படுகிறேன். .....ம்.... என்னுள்ளிருந்து எழுந்ததொரு பெருமூச்சு. எமது காலம் ஒருவிதம், இப்போது ஒரு விதமாக உள்ளது. என் மகனது காலத்திலேயே என் தந்தையை மனதிற்கொண்டு அவனையும் பழக்க முயன்று தோற்றுப்போய் சோர்ந்ததைக் கண்ட என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பைப் பாதுகாப்பது நமது இன்றியமையாத கடமை - திருத்தந்தை

படைப்பின் பாதுகாவலர்களாக அதனைப் பாதுகாக்கவேண்டியது நம் அனைவரின் தவிர்க்க இயலாத கடமையாக இருக்கின்றது என்று திருத்தந்தை ஐரோப்பிய பசுமைத் திருப்பயணிகளுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். ஹங்கேரி நாட்டிலிருந்து சுலோவாக்கியா வழியாக ஆஸ்ட்ரியாவின் மரியாசெல் அன்னை மரித் திருத்தலத்திற்குப் பசுமைத் திருப்பயணம் மேற்கொண்ட ஐரோப்பியத் திருப்பயணிகளுக்கு அனுப்பியுள்ள தந்திச் செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார்.

மனைவி அப்பணியைச் சிரமேற் கொண்டாள். பயன் என்னவோ கேள்விக் குறியாகவே இருந்தது. எப்படி இது ஆகும்? எனச் சிந்தித்ததைத் தவிர வேறு எதுவும் ஆகவில்லை. ஆறாந்தரம் வரை இந்தக் கதியிலேயே படிக்க ஆரம்பித்தவன்தான் என் மகன் கிறிஸ்டி. அந்த வருடம் மூன்றாந் தவணையின்போது அவனுள் ஒரு மாற்றத்தை அவதானித்தேன். ஒரு வேகத்தைக் கண்டேன்.

அன்றே ஆரம்பித்தான். அவன் ஒரு வைத்தியராகும்வரை வகுப்பில் முதலாமிடத்தை எட்டிப் பிடித்தவன் விடவேயில்லை. இருந்தபோதும் அவனால் அந்த அதிபரை மறக்கமுடியவில்லை. அவர் மீதுள்ள கோபம் ஒரு பக்கமிருந்தாலும் இன்றைய தனது உயர்நிலைக்கு அவரும் காரணம் என்பதை நினைத்து "குட்டுப்படாலும் மோதிரக்கையால்தானே குட்டுப்பட்டேன்" என்று அடிக்கடி எம்மிடம் சொல்லிச் சிரித்துக்கொள்வான். "ஜக்சன்... நேரம் ஆறரையாகுது.... எழும்பு மனே..." என என் மகனும் சேர்ந்து எழுப்பும் குரல் கேட்டு இவ்வுலகுக்கு மீண்டேன். இவனுக்கும் ஊக்கம் வர ஏதாவது நடக்காதா? என்ற ஆதங்கம் நிறை எதிர்பார்ப்புடன் வீட்டுக்குள்ளே நுழைகிறேன் பெருமூச்சுடன்...

● மற்ரில்டா

நரையும் திரையும்

உடைந்த கலப்பைகளும்
விளையாத நிலங்களும்
சூரியனோடு பேசுகின்றன
சூரியனோடு அழுகின்றன

இறந்த காகங்களும்
விழுந்த இலைகளும்
பூமியோடு பேசுகின்றன
பூமியோடு அழுகின்றன

இயற்கை மரணங்களும்
செயற்கை மரணங்களும்
மயானத்தில் பேசுகின்றன
மயானத்தில் அழுகின்றன

பிறந்த மழலையும்
நரைத்த முதுமையும்
திரையில் பேசுகின்றன
திரையில் அழுகின்றன

யுத்தமும் சமாதானமும்
ஒழுக்கமும் உண்மையும்
வெளிகளில் பேசுகின்றன
வெளிகளில் அழுகின்றன

மனிதனும் மனிதனும்
மனிதமும் மனிதமும்
திகைப்பில் பேசுகின்றன
திகைப்பில் அழுகின்றன

● பிரேமிந்த் சிவகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட மேய்ப்புப் பணிச் சபையின் வருடாந்த மகாநாடு - 2010

இந்த மகாநாட்டின் கருப்பொருளாக 'வளமான குடும்ப வாழ்வு' என்பது அமைந்திருந்தது. எதிர்வரும் 2011ம் வருடத்தினை எமது திருச்சபை குடும்ப ஆண்டாகப் பிரகடனப்படுத்தியிருப்பதே இதன் காரணம். இத்தகைய முக்கியத்துவம் மிக்க இம்மாநாடு ஐப்பசித் திங்கள் 01ம், 02ம் தினங்களில் மட்டக்களப்பு மன்ரேசா தியான இல்லத்தில் இடம் பெற்றது. மாலை ஐந்து மணிக்கு மங்கல விளக்கேற்றி ஆரம்ப வழிபாட்டுடன் ஆரம்பமான இம்மகாநாட்டுக் குத் திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத் துணை ஆயர் அதிவந்தனைக்குரிய அருட்கலாநிதி பொன்னையா யோசப் ஆண்டகை அவர்கள் தலைமை வகித்தார்.

இதுவரை காலமும் மேய்ப்புப் பணிச்சபை யின் செயலாளர், உபசெயலாளர், பொருளாளர்க ளாகப் பணியாற்றிய 8 பேர் கௌரவிக்கப்பட்டனர். இவர்கள் முறையே செயலாளர்களாகப் பதவி வகித்த திரு.சாந்தன், திரு.அருமைராஜா, திரு.ரெட்ணராஜா, உபசெயலாளர்களாகப் பதவி வகித்த செல்வி.மற்றில்டா, செல்வி.விமலினி, பொருளாளர்களாகப் பதவி வகித்த திரு.இராயப்பு, திரு.பத்திநாதன், திரு.அன்ரனி ஆகி யோராவர். துணை ஆயர் தலைமை உரை வழங்கி, யாழ்ப்பாண மறைமாவட்டத்திலிருந்து வருகை தந்திருந்த அருட்தந்தை F.J.இராஜநாயகம் அடிக ளாரை அறிமுகப்படுத்தினார். அவர் "வளமாகும் குடும்ப வாழ்வு" எனும் விடயம் பற்றி உரை வழங் கினார். "தற்கால சமூக மாற்றங்கள், திருமணத்தின் பாரம்பரிய மாதிரி அழிதல், குடும்ப வகைகள், தற்போதைய கோலங்கள், ஒருவருக்கு ஒருவர் என்பதற்கு விதிவிலக்காக பலதார மணம், எமது கலாசாரம், குடும்பத்தின் உண்மை வரைவிலக் கணம், இன்றைய உலகில் காணப்படும் குடும் பங்களின் 3 வகைகள், தற்காலக் குடும்ம்பங்களின் பிரச்சினைகள், அமைதிக் கலாசாரத்திற்கான 4 முன்மொழிவுகள், திருச்சபையின் அருட்பணிகள், இயேசுவின் வழி, அதனை எவ்விதம் நாம் எம் வாழ்வில் பிரயோகிக்கலாம்? திருச்சமூகமாக உதவ எமக்கு இயெசுவின் மனப்பாங்கு வேண்டும்" என்பன போன்ற பயன்மிக்க கருத்துகளை வழங்கி உரையை முடித்தார். இவ்வுரையிலிருந்து நான்கு கருத்துகள் 4 குழுக்களுக்கு வழங்கப்பட்டு கலந்துரையாடலுக்கு அனுப்பப்பட்டன. மீளமர்வில் ஒவ்வொரு குழுக் களும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தன.

இரண்டாம் நாள் நிகழ்வுக்கு தலைவர் - ஆயர் பேரருட்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை சமூக மளித்துத் தலைமையுரை ஆற்றினார். "இன்றைய குடும்பங்கள் இன்று பல சிக்கல்களுக்கு மத்தியில் உள்ளன. எனவே குடும்பங்களை நாம் பலப்படுத்த வேண்டும். 'இன்றைய உலகில் கிறிஸ்தவ குடும் பங்களின் பொறுப்பு' என்ற சுற்றுமடல் பாப்பிறையால் வெளியிடப்பட்டுள்ளது. ஆயர்கள் இதனைத் தம் மறைமாவட்டங்களில் நடைமுறைப்படுத்தி வருகின் றனர். இது திருச்சபைக்குரிய பாரிய பொறுப்பாகும். குடும்பங்களுக்குள் நாம் ஊடுருவிச் செல்லவேண்டி யுள்ளது. எனவே எதிர்வரும் ஆண்டைக் குடும்ப ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளோம்" என்று உரையை நிறைவுசெய்தார். இறுதியில் துணை ஆயரால் 2011ம் வருடத்திற்கான செயற்றிட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

- **குடும்பங்களையறிதல்**
- **உருவாக்குதல்**
- **கிறிஸ்தவ குடும்ப விழுமியங்களை முன்வைத்தல்**
- **குடும்ப ஆன்மீகத்தை வளர்க்கும் முயற்சி**
- **சமுதாய, பொருளாதார ரீதியில் குடும்பங்களை முன்வைத்தல்**
- **பாராட்டுதல், ஊக்குவித்தல், போற்றப்படுதல்**
- **சகவாழ்வு**

பின்னர் ஆயர் கூறுகையில் அடுத்த வரு டத்தில் குருக்கள் பங்கு முழுவதிலுமுள்ள குடும் பங்களைத் தரிசித்தல் நலம். மறைமாவட்ட இணை யத்தளத்தை அனைவரும் பயன்படுத்த முன்வர வேண்டும் என்று குறிப்பிட்டார். மேலும், மட்டக் களப்பில் அருட்கொடை இயக்கத்தின் செயற்பாடுகள் பற்றியும் சபையில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து செயலாளர் திரு.A.ரவீந்திரனின் நன்றியுரையுடன் மதியம் 12.15 மணியளவில் மகாநாடு முடிவடைந்தது.

- மற்றில்டா.R

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ நாகரீகம்

கிறிஸ்தவ மறையின் ஆரம்ப வரலாறும், தூய ஆவியின் வருகையுடன் திருச்சபை ஆரம்பமும்

கிறிஸ்தவ மறையின் ஆரம்ப வரலாற்றை அறிய அதற்கு முன் நாம் யூத மறை வரலாறு பற்றி அறிய வேண்டும். யூத மதமானது ஆபிரகாமின் அழைத்தலோடு ஆரம்பமானதாகும். பாவத்தினால் ஆதிப் பெற்றோர் மூலம் மனுக்குலம் வீழ்ச்சியுற்றது. இதனை ஈடு செய்யவும், மீண்டும் மனிதனை மீட்கவும் இறைவன் ஒரு திட்டம் தீட்டினார். அதற்கமைய பல தெய்வ வழிபாடுகள் செய்து அஞ்ஞானியாய் வாழ்ந்த ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்தார். நாடோடியாய்த் திரிந்த இவருக்கு இறைவன் ஓர் இனத்தையும், நாட்டையும், வாரிசு வழியாய் மீட்பையும் கொடுத்தார். மேலும் இவர் சந்ததியினரை எகிப்தில் 450 ஆண்டுகள் அடிமைகளாக வாழவைத்து அதன் மூலம் இஸ்ராயேல் எனும் புதிய மக்களாக உருவாகவும் வழிசெய்தார்.

மேலும் அற்புதமான முறையில் மோசே மூலம் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தும் 40 ஆண்டுகள் பாலைவனத்தில் அலைந்த அவர்களுக்கு, தம்மையும் தம் வல்லமை பற்றியும் தாம் அவர்கள் மேல் கொண்டுள்ள அன்பு, கரிசனை போன்றவைகளையும் தாம் தரும் பாதுகாப்பையும், பராமரிப்பையும் காணச் செய்தார். இவைகள் அனைத்தையும் உணர்ந்த மக்கள் அவரையே தம் ஒரே கடவுளாய் ஏற்று முழு நம்பிக்கை கொண்டனர். இதனை ஏற்ற இறைவன் சீனாய் மலையில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். பின்னர் தம் விருப்பினை கட்டளை வடிவில் மோசே மூலம் அவர்களுக்குக் கொடுத்தார். அம்மக்களும் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து, அவைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டனர். இவ்வாறு இக்கட்டளைகளிலிருந்தும் உடன்படிக்கையிலிருந்தும் உருவாகியதே யூத மதமாகும். இத்தகைய உடன்படிக்கையும் கடவுளின் கட்டளையும் யூத மதத்தின் அச்சாணியாக இருந்து வருகிறது.

இத்தகைய உடன்படிக்கையின் மக்கள் மத்தியில் இருந்தே கடவுள் யூதா கோத்திரத்தையும் அதிலிருந்து தாவீது வம்சத்தையும், யோசேப்பின் குடும்பத்தையும் தேர்ந்தெடுத்தார். இவர்கள் மூலம் தாம் வாக்களித்த மெசியாவை இவ்வுலகிற்கு அனுப்பினார். மெசியாவான இயேசு வழியாக மனுக்குலத்தை மீட்டு அவர் அடைந்த பாடுகள், மரணம், உயிர்ப்பு மூலம் மீண்டும் இறையாட்சியின் மக்களாக்கினார். மேலும், இயேசு தம் மீட்புப் பணி தொடரவும், உலகம் முடியும்வரை வாழும் மக்கள் மீட்படையவும் சகல ஆயத்தங்களையும் செய்தார். இதற்காகப் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து, தம்மோடு வைத்திருந்து, பயிற்றுவித்து தமக்குப் பின் தம் பணியைச் செய்ய அனுப்பிவைத்தார். பின்னர் மேலும் 72 பேரையும் இதற்காய்த் தேர்ந்துகொண்டார். அவர்களுக்கு ஆவியை வாக்களித்து, அவர் வருகைவரை காத்திருக்கும்படி கூறி விண்ணகம் சென்றார்.

இவ்வாறு இயேசுவின் விண்ணேற்பினைத் தொடர்ந்து சீடர்கள் மாடியில் காத்திருந்து செபிக்கையில் அற்புதமாய் ஆவியால் நிரப்பப்பட்டார்கள். இயேசுவும் தாம் வாக்களித்ததை நிறைவேற்ற யூதர்களின் பெந்தக்கோஸ்து தினத்தைத் தேர்ந்துகொண்டார். இயேசு ஒரு யூதன்; அவர் தேர்ந்துகொண்ட பன்னிருவரும் யூதர்கள்; இயேசு யூதர்களுக்கே போதித்தார். பின்னர் தேர்ந்துகொண்ட 120 பேரும் யூதர்களே. மற்றும் இயேசுவும் அவர் சீடர்களும் யூத செபக்கூடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தந்தையின் "நாசரேத்தின் இயேசு - இரண்டாம் பாகம்" மார்ச் மாதம் வெளியீடு



திருத்தந்தை 16ம் பெனடிக்ட் எழுதியுள்ள 'நாசரேத்தின் இயேசு - இரண்டாம் பாகம்' எனும் நூல் வரும் தவக்காலத்தின் முதல் ஞாயிறான மார்ச் 13 அன்று வெளியிடப்படும். இயேசுக் கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்து எழுதப்பட்டுள்ள இந்நூல் தற்போது பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது எனவும், அனைத்து மொழிபெயர்ப்புகளும் ஜனவரி 15ம் திகதி அளவில் முடிக்கப்பட்டு பதிப்பாளர்களை அடையும் எனவும் வத்திக்கான நூல் வெளியீட்டகத்தின் தலைவரான ஜிசுப்பே கோஸ்டா வத்திக்கான் வானொலிக்கு அளித்த பேட்டியொன்றில் கூறினார். திருத்தந்தை எழுதியுள்ள இந்நூலை வெளியிட 18 பதிப்பகங்கள் இதுவரை முன்வந்துள்ளன என்றும், இன்னும் பிற பதிப்பகங்கள் முன்வரக்கூடும் என்றும் ஜிசுப்பே கோஸ்டா கூறினார். இதற்கிடையே திருத்தந்தையர்களின் கோடை இல்லமான காஸ்தல் கந்தோல்ஃபோவில் ஆகஸ்ட் விடுமுறை காலத்தைச் செலவிட்ட திருத்தந்தை, இந்நூலின் இறுதிப் பாகமான மூன்றாம் பாகத்தை எழுதியதாக வத்திக்கான் செய்தித் தொடர்பாளர் இயேசுசபைக் குரு லொம்பார்தி செய்தியாளர்களிடம் கூறியது குறிப்பிடத்தக்கது.

சென்று அவர்கள் மத வழிபாடுகள், செபங்களில் பங்கெடுத்தனர்.

மேலும் திருச்சபை ஆரம்பமானதும் அப்போஸ்தலர்கள் உடனடியாய்த் தம் புது வாழ்வுப் பணியினைத் தொடர்ந்தனர். இதில் பேதுரு சாதாரண படிப்பறிவில்லா மீனவனாய் இருந்தும் அவர் ஆற்றிய உரை அனைவரையும் மாற்றியது. இது திருச்சபைக்கு மாபெரும் வெற்றியாய் அமைந்தது. இவரின் உரை மூலம் இஸ்ராயலர் தம் பிழைகளை உணரச் சந்தர்ப்பம் கிடைத்தது. பின்னர் சாலமோன் மண்டபத்தில் ஆற்றிய இரண்டாவது உரை மூலம் மற்றொரு திருப்பத்தைக் காண முடிகிறது. இவ்வாறு நாளுக்கு நாள் பன்னிருவர் மூலம் திருச்சபை பல வழிகளிலும் வளர்ந்துகொண்டே சென்றது. மேலும், ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்வு ஏனையோரில் இருந்து பல வழிகளிலும் வேறுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. பேதுருவின் உரை மூலம் பெற்ற விசுவாசத்தை தொடர்ந்து அப்போஸ்தர்களின் போதனைகள் மூலம் மேலும் உறுதிப்படுத்தினார்கள்.

"உங்கட ஒழுங்க வழக்கு எப்பிடி"

"வக்கீலே என்ட வீட்டையும் வளவையும் விலைக்கு வாங்கித்தார்"

• மணி

இவ்வாறு வளர்ச்சியடைந்த திருச்சபையானது பின்னர் அமைப்புப் பெறுவதைக் காண்கின்றோம். மக்கள் பொதுவாழ்வில் பிரச்சினைகள் பல தோன்ற துணைத்தொண்டர் எழுவர் நியமிக்கப்பட்டனர். இதிலும் யூதக் கிறிஸ்தவர்களே இருந்தனர். இவர்கள் அறப்பணி செய்ய நியமிக்கப்பட்டாலும் பின்னர் நற்செய்திப் பணியிலும் ஈடுபட்டனர். இவ்வாறு கிறிஸ்தவ மறையானது தொடக்கம் முதல் திருச்சபை வளர்ச்சிப்படிவரை யூதத்துடன் பிணைந்திருப்பதைக் காணமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சுகமான வாழ்வுக்கு மாதம் ஒரு யோகா

நவாசனம்



செய்முறை

- விரிப்பின் மீது கால்களை ஒன்றுசேர்த்து கைகளை நீட்டி மல்லாந்து படுக்கவும்.
- இரண்டு கால்களையும் கைகளையும் தரையில் இருந்து படத்தில் காட்டியவாறு உயர்த்தவும்.
- இவ்வாறு உயர்த்த முடியாதவர்கள் உட்கார்ந்த நிலையில் கால்களை நீட்டி முழங்காலை மடித்து கைகளால் பிடித்து ஆசன நிலைக்கு வரலாம்.
- கால்களை உயர்த்தும்போது உடம்பையும் உயர்த்தி இடுப்பை மட்டும் தரையில் வைத்து சமப்படுத்தவும்.
- கைகளை நன்றாக உடலின் முன்புறமாக அல்லது உடலின் பக்கவாட்டில் நீட்டவும்.
- இது ஒரு படகு நீரில் மிதக்கும் அமைப்பைப் போன்று இருக்கும்.
- ஆசன நிலையில் இயல்பான சுவாசத்தில் இருக்கவேண்டும்.
- பத்து முதல் இருபது வினாடிகள் இருந்து பழகலாம்.
- கை, கால்கள், தலை, முகம் போன்றவற்றை தளர்த்தி இயல்பு நிலைக்கு வரவும்.
- மூன்று முறை செய்யலாம்.

இதனால் ஏற்படும் பலன்கள்

- இளமையைக் காப்பதில் இவ்வாசனம் பெரும் பங்கு வகிக்கின்றது.
- வயிற்றுத் தசைகள், உள்ளுறுப்புகளுக்கு நல்ல பயிற்சி கிடைக்கின்றது.
- மனப்படபடப்பு நீங்கி திடமான மனநிலை ஏற்படும்.
- அனைத்துப் பகுதிகளிலும் அழிந்த திசுக்கள் புதுப்பிக்கப்படுகிறது.
- உடல் நடுக்கம், கை, கால் நடுக்கம் நீங்கி சுறுசுறுப்புப் பெறுகின்றது.

இதனால் தீரும் நோய்கள்

- வயிற்று உறுப்புகள், இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல் அனைத்துப் பகுதிகளிலும் அழிந்த திசுக்கள் புதுவேகம் பெறுகிறது.
- நரம்புத் தளர்ச்சியைப் போக்குகின்றது.
- தொப்பை குறைகின்றது.
- வாய்வுத் தொல்லை நீங்கும்.
- ஆண், பெண் போக சக்திகை அதிகரிக்கச் செய்வதோடு அது சம்மந்தமான நோய்களைத் தடுக்கின்றது.

குறிப்பு

- அடிமுதுகு வலி உள்ளவர்கள் இவ்வாசனத்தைச் செய்யக்கூடாது.
- குடலிறக்கம் உள்ளவர்கள் இவ்வாசனத்தைத் தவிர்ப்பது நல்லது.

மாற்று ஆசனங்கள்

- புஜங்காசம், பிறையாசனம், உஸ்ட்ராசனம்

மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இனப்பிரச்சினை தீர்வை நோக்கிய பாதையில்...

தொடர் - 02

D.S.சேனநாயக்கா அவர்களின் மரணத்தைத் தொடர்ந்து 1952ல் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இந்தியத் தொழிலாளர்களின் வாக்குரிமையிழ்ப்புக் காரணமாக, சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் நடைபெற்ற இரண்டாவது பாராளுமன்றத் தேர்தலிலே இந்தியத் தமிழர்கள் முற்றாகத் தமது பிரதிநிதித்துவத்தை இழக்க நேரிட்டது. முதலாவது பாராளுமன்றத்திலே 7 பிரதிநிதிகளைக் கொண்டிருந்த இந்தியத் தமிழர்கள் இரண்டாவது பாராளுமன்றத்திலே ஒருவரைத்தானும் கொண்டிருக்கவில்லை. அதேநேரம் இலங்கைத் தமிழர்கள் சார்பான சமஷ்டிக் கட்சி தொடர்ச்சியாக சமஷ்டி அரசியலமைப்புக்கான கோரிக்கையை முன்வைத்து செயற்பட்டு வந்தது. இதனடிப்படையில் 1956ல் திரு.S.J.V.செல்வநாயகம் தலைமையிலான குழுவினர் அதிகளவு எண்ணிக்கையிலான ஆசனங்களுடன் சமஷ்டிக் கொடியின் கீழ் பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்தமை குறிப்பிடத்தக்கதொரு சம்பவமாகும். இச்சம்பவம் அக்காலத்தில் அரசியலில் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தது. இப்பாராளுமன்றக் காலத்தில்தான் "சிங்களம் மட்டும்" அரச கரும மொழியாகவும் உத்தியோகபூர்வ மொழியாகவும் ஆக்கும் "சிங்கள மட்டும் சட்டம்" (The Sinhala Only Act) சட்டமாக்கப்பட்டது. இச்சட்டம் அமுலாக்கப் பட்டதைத் தொடர்ந்து சிங்களவர் தமிழர் முரண்பாடு படிப்படியாக வலுவடையத் தொடங்கியது.

"சிங்களம் மட்டும்" சட்டத்தின் காரணமாகத் தமிழ் மக்களின் எதிர்காலம், பொருளாதாரம், கலாசாரம் அனைத்தும் சிதைவடைந்தன. தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அநீதிக்கு எதிராக அவர்கள் அமைதி வழியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடாத்தியபோது சில சிங்கள பௌத்த செயற்பாட்டாளர்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இக்காலத்தில் நாட்டின் பிரதமராக இருந்த திரு.S.W.R.D.பண்டாரநாயக்கா அவர்கள் சமஷ்டிக் கட்சியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் ஓர் உடன்படிக்கை உருவானது. இது "பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம்" எனப்பட்டது. (Bandaranayake - Selvanayagam Pact) இவ்வொப்பந்தத்தின்படி நாட்டில் பரவலாகப் பேசப்படும் சிங்கள மொழி, உத்தியோகபூர்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் 'தமிழ் மொழியைப்' பரவலாகப் பேசும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழி நிர்வாக மொழி என்ற தகுதியையும் பெற்றுக்கொண்டது. மேலும் இச்சந்தர்ப்பத்தில் அரச காணிகளில் குடியேற்றங்களை அமைத்தல் தொடர்பான விடயங்களைக் கையாளவென அதிகாரமுள்ள ஒரு பிராந்தியக் கவுன்சில் (Regional Council) உருவாக்கப்படல் வேண்டும் என்ற ஏற்பாடும் இடம்பெற்றிருந்தது.

இது இவ்விதம் காணப்பட, ஐக்கிய தேசியக் கட்சி பௌத்த குருமாரில் சில பிரிவினர் திரு. பண்டாரநாயக்கா அவர்களின் அரசாங்கத்திற்குக் கொடுத்த அழுத்தங்கள் காரணமாக இவ்வொப்பந்தத்தை திரு.பண்டாரநாயக்கா அவர்கள் கைவிட நேரிட்டது. இதன் காரணமாக இரு பிரதான சமூகங்களுக்கிடையிலான மோதல் தொடர்ந்து இடம்பெறலாயிற்று. இவ்வொப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிராக ஜே.ஆர்.ஜெயவர்தனா கண்டிக்குப் பாதயாத்திரை சென்றார். தமிழ்த் தலைமகன் அரசாங்கங்களுடன் செய்துகொண்ட உடன்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதை எதிர்க்கட்சிகள் தீவிரமாக எதிர்த்ததாலேயே தீர்வு எதுவும் சாத்தியமாகாமல் போனது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை ஒன்றுக்கு ஆளும் கட்சி தீர்வு காண முற்பட்டால் அதை எதிர்க்கட்சி எதிர்க்கும். இந்த அரசியல் போக்கின் காரணமாகவே நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு இடம்பெற முடியாத நிலை ஏற்பட்டது.

திரு.பண்டாரநாயக்கா அவர்களின் அகால மரணத்தைத் தொடர்ந்து 1960-64 காலப்பகுதியில் திருமதி.பண்டாரநாயக்கா நாட்டின் பிரதமரானார். இதைத் தொடர்ந்து திருமதி.பண்டாரநாயக்கா இந்தியாவுடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார். இது சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் எனப்பட்டது (Srima - Shastri Pact). இவ்வொப்பந்தத்தின்படி இந்தியா 525,000 இந்தியத் தமிழர்களை மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் 300,000 இந்தியத் தமிழர்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்கும் எனவும் உடன்பாடு காணப்பட்டது. இவ்விரண்டுக்கும் உட்படாத 150,000 பேர் தொடர்பாகப் பின்னர் கலந்துரையாடப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

S.W.R.D.பண்டாரநாக்கா

1973ல் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும் திருமதி இந்திராகாந்திக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு ஒப்பந்தத்தின்படி 75,000 பேர் இலங்கை குடியுரிமை பெறுவர் எனவும் மிகுதி 75,000 பேரை இந்தியா ஏற்றுக்கொள்ளும் எனவும் உடன்பாடு காணப்பட்டது. இவ்வுடன்படிக்கை 15 வருடத்திற்குள் பூர்த்தி செய்யப்படும் எனக் கூறப்பட்டது. ஆயினும் இவ்வொப்பந்தம் முழுமையாக 31.10.1979இலேயே நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ்வொப்பந்தக் காலம் மேலும் ஒக்டோபர் 1981வரை நீடிக்கப்பட்டது.

இவை இவ்வாறிருக்க படிப்பினைகளிலிருந்து பாடம் கற்பதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் கடந்த 17.08.2010 அன்று சாட்சியமளித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்தியாவுக்கான தூதுவராகக் கடமையாற்றியவருமான மங்கள முனசிங்க அவர்கள் "இலங்கையில் பயங்கரவாதத்தை உருவாக்கியவர்கள் பெரும்பான்மை இனத்தவரான சிங்களத் தலைவர்களே" என்று சாட்சியம் அளித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

- A.S.யோகராஜா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியட்நாமின் புரட்சி கவிஞர் ஹோ சி மிங்

வாய்கள்
பொன்னால்
நிரப்பப்பட வேண்டும்

இந்த உலகில் புரட்சி செய்து வெற்றி கண்டவர்கள் சிலர் உள்ளனர். கியூபா நாட்டு பிடல் காஸ்ட்ரோ, லிபியா நாட்டு கர்னல் முகம்பர் அல் கடாபி, கிழக்குத் திமோர் நாட்டு சனானா குஸ்மாவோ, சீன நாட்டு மாவோசேதுங், அதில் வியட்நாம் நாட்டு புரட்சி வீரர் ஹோ சி மிங். அமெரிக்க ஆதிக்கத்திலிருந்து வியட்நாமை விடுவிக்கக் கடுமையாகப் போராடியவர். அவர் உருவாக்கிய வியட்கொங் கொரில்லா படைகளை நல்முறையில் இயக்கியவர்.

உருவத்திலே மிகவும் சிறியவராகவும் நோயாளியைப்போல காட்சியளித்தாலும் மனத்தைரியம் அதிகம் கொண்டவராக இருந்தாரென்பதை அவரது வரலாற்றை வாசிப்பதன் மூலம் தெரிய வருகிறது. ஹோ சி மிங் சிறையில் இருக்கும்போது எழுதிய Prison Diary (சிறைச்சாலைக் குறிப்பு) என்னும் புத்தகத்தின் சிங்கள மொழிபெயர்ப்பில் இருந்து அவர் எழுதிய கவிதையை இங்கு நான் தமிழில் மொழிபெயர்த்துள்ளேன்.

நான்கு மாதங்கள் கடந்தபோது
சிறையில் கடக்கும்
ஒரே ஒரு நாளின் நீளம்
அதன் வெளியே கடக்கும்
ஆயிரம் வருடங்களுக்குச் சமம்

இவ்வார்த்தையில் இந்த உண்மையை
அதேபோலவே கூறிய மூதாதையர்
மனிதத் தன்மை உரிய
ஒன்றுக்கும் உதவாத வாழ்வு
நான்கு மாதம் கடக்க
நான் இன்னும் பத்து வருட
கிழவனைப் போல் ஆனேன்

நான்கு மாதங்கள்
வயிறார உண்ணவில்லை
கடந்த நான்கு மாதமாக
ஓர் இரவுகூட
ஒழுங்காகத் தூங்கவில்லை

நான்கு மாதமாக
உடுத்த உடை மாறவில்லை
கடந்த நான்கு மாதமாக
ஒரு தடவையாவது உண்ணவில்லை

அப்படி இருந்த என் வாயில்
ஒரு பல் விழுந்துவிட்டது
தலைமுடி நரைத்துவிட்டது
பட்டினியில் அடிபட்ட
கறுத்தநிற நோஞ்சான்
பிசாசுக்கு இரண்டாகாத
அளவுக்கு என் மேனியில்
சொறி சிரங்கு நிறைந்துள்ளது.

ஐயோ, அதிர்ஷ்டம்
கடினப் போக்கும்
பொறுமையுடனும்
ஓர் அடி பின்வாங்காமல் போகும்
என் உடல் உருக்குலைந்ததாயும்
மனத்தைரியம் அசைவுறாமல்
அவ்வாறே இருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
15- 12 - 2010

'பரிசுப் போட்டி'

விவிலியம் கற்போம் - 93

(எண்ணிக்கை 29:1–40)

(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

ஏழாம் மாதம் முதல் நாளன்று உங்களுக்குத் திருப்பேரவை இருக்கும்: கடினவேலை ஏதும் செய்யக்கூடாது. எக்காளங்கள் முழங்கும் நாள் அது. ஆண்டவருக்கு உகந்த நறுமணமான எரிபலியை நீங்கள் செலுத்த வேண்டும். அதற்கு ..... ஒன்று, ஆட்டுக்கிடாய் ஒன்று, ஒரு வயதுடைய ஆட்டுக்குட்டிகள் ஏழு: இவை பழுதற்றவையாய் இருக்க வேண்டும். எண்ணெயில் பிசைந்த மாவு, காளைக்காக ஆறு படியும், ஆட்டுக் கிடாய்க்காக நான்கு படி அளவில் இருக்கும். ஏழு ..... ஒவ்வொன்றுக்கும் இரண்டுபடி அளவாக இருக்கும். வெள்ளாட்டுக் குட்டி ஒன்று, மாதந்தோறும் அளிக்கும் எரிபலி, அதற்குரிய உணவுப் படையல், எந்நாளும் செலுத்தும் எரிபலி, அதற்குரிய நீர்மப் படையல் ஆகியவை ஆண்டவருக்கு உகந்த ..... நெருப்புப் பலியாக அமையும். பத்தாம் நாளில் உங்கள் திருப்பேரவை கூடும்போது உங்களை வருத்திக் கொள்ளுங்கள்: எந்த வேலையும் செய்யாதிருங்கள். எரிபலியொன்றைச் செலுத்துங்கள். அதற்கு ஏற்கனவே சொல்லப்பட்டவற்றுடன் ..... போக்கும் பலியாக ஒரு வெள்ளாட்டுக் கிடாய் செலுத்துவாய். பதினைந்தாம் நாளில் திருப்பேரவை கூடும்: கடின வேலை செய்யக்கூடாது: ஏழு நாள்கள் ஆண்டவருக்கு விழா எடுக்க வேண்டும். ஆண்டவருக்கு உகந்த நறுமணமான எரிபலியாகவும், ... ஆகவும் செலுத்த வேண்டியவை: இளங்காளைகள் பதின் மூன்று, ஆட்டுக்கிடாய்கள் இரண்டு, ஒரு வயதுடைய ஆட்டுக்குட்டிகள் பதினான்கு: இவை பழுதற்றவையாய் இருக்க வேண்டும். எண்ணெயில் பிசைந்த மிருதுவான மாவு, ... காளைகளில் ஒவ்வொன்றுக்கும் ஆறு படி இரண்டு ஆட்டுக்கிடாய்களில் ஒவ்வொன்றுக்கும் நான்குபடி பங்கு, பதினான்கு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்கும் இரண்டு படி அளவில் இருக்கும். மேலும், எந்நாளும் செலுத்தும் எரிபலி, அதற்குரிய ..... அதற்குரிய நீர்மப் படையல் ஆகியவை தவிரப் பாவம் போக்கும் பலியாகவும் ஒரு ..... செலுத்துவாய். இரண்டாம் நாள், மூன்றாம் நாள் என்றபடி ஏழாம் நாள் வரை இவ்விதம் செய்வாய். எட்டாம் நாளன்று சிறப்புக் கூட்டம் நடைபெறும். நியமிக்கப்பட்ட ..... நீங்கள் ஆண்டவருக்குப் படைக்கவேண்டியவை இவையே. உங்கள் பொருத்தனைகள், தன்னார்வப் படையல்கள், எரிபலிகள், உணவுப் படையல்கள், நீர்மப் படையல்கள் ..... பலிகள் ஆகியவை நீங்கலாகச் செய்யவேண்டியவைஇவையே. ஆண்டவர் மோசேக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் மோசே இஸ்ரயேல் மக்களுக்குச் சொன்னார்.

விடைகள் : **பதின்மூன்று, உணவுப் படையல், திருநாள்களில், நல்லுறவு, வெள்ளாட்டுக்கிடாய், நெருப்புப் பலி, பாவம், ஆட்டுக் குட்டிகள், நறுமணமான, இளங்காளை**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுப் போட்டி

அறிவை வளர்ப்போம் – 93

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைநகர்
   (நியூயோர்க், வாசிங்டன், கலிபோர்னியா)

2. நடனங்கள் மூலம் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ளும் பூச்சி
   (நுளம்பு, தேனீ, குளவி)

3. திருக்குறளின் மொழிபெயர்ப்பு முதன்முதல் இம்மொழியில்தான் இடம்பெற்றது.
   (ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன்)

4. சாதாரண உரையாடலின் ஒலி அளவு
   (60 டெசிபெல், 50 டெசிபெல், 70 டெசிபெல்)

5. கழுதை தேய்ந்து .....
   (காலுடைந்து போனது, கட்டெறும்பானது, கால்நோக நின்றது)

6. 'அவனுக்குச் சொன்னேன்' இவ்வாக்கியத்தில் வரும் நான்காம் வேற்றுமை உருபு
   (அ, ஒ, கு)

பெயர் : .....

முகவரி : .....

.....

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 93
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டி முடிவுகள்

விவிலியம் கற்போம் - 91 விடைகள்

தலைவர்கள், புதல்வர்கள், செலோபுகாதின், மகளும், மோசேக்கு, ஆரோன், சீன், யோசுவாவை, கீழ்ப்படியும்படி, எலயாசரின்

அறிவை வளர்ப்போம் - 91 விடைகள்

1) சுவாமி விபுலானந்தர் 2) பிரித்தானியா 3) எட்டரை நிமிடங்கள்
4) பற்கள் 5) மீசைக்கும் ஆசை 6) தொகை

பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS

இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி ரூபா 200/= பரிசு பெறுவோர்

- திருமதி. த. ஜெயசங்கரன்
  புளியங்குளம்
  திருகோணமலை
- பி. ஜெயமலர்
  காயத்திரி கிராமம்
  திருக்கோயில் - 4

ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 100/= பரிசு பெறுவோர்

- கி. செறோன்
  158, கிறீன் வீதி
  திருகோணமலை
- கிறேசி போல்
  38/6, கொத்தி ஒழுங்கை
  திருகோணமலை

சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 43 முடிவுகள்

- **முதலாம் பரிசு - 300/=**
  மனோகரன் நிதுர்ஷன்
  உன்னிச்சை வீதி
  ஆயித்தியமலை
- **இரண்டாம் பரிசு - 200/=**
  D. வினுஷா
  இல:3, 5ம் குறுக்கு
  மாமாங்கம்
  மட்டக்களப்பு
- **3ம் பரிசு - 100/=**
  K. அபிநயா
  8ம் குறுக்கு
  திராய்மடு
  மட்டக்களப்பு

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றில் தவழ்ந்துவரும்.....

இலங்கை வானொலி தேசிய சேவையில்

டிசம்பர்- 2010 கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்

கத்தோலிக்க நற்சிந்தனை - காலை 5.55 மணி

நாள்: 04, 05, 06, 07, 08, 09, 10, 18, 19, 20, 21, 22, 23, 24

சிறுவர் உலகம் – மாலை 7.00 மணி

நாள்:- 14, 28

புதிய உலகம் – மாலை 7.00 மணி

நாள்:- 12, 26

கிறிஸ்து பிறப்பு விழாவையொட்டி ஒலிபரப்பாகும் சிறப்பு நிகழ்ச்சிகள்

நாள்:- டிசம்பர் 24, 25, 26, 27, 28, 31, ஜனவரி 01

நிகழ்ச்சித் தொகுப்பு: மலர்வேந்தன்

தொடர்பு: சமூகத் தொடர்பு நிலையம், அ.பெ. எண் – டீடீ, மட்டக்களப்பு.

சனி, ஞாயிறு தினங்களில்: செபம், கத்தோலிக்க நற்சிந்தனை

சக்தி FM, காலை 5.30 மணி

வழங்குபவர்: அருட்தந்தை தொஹான் பேனாட்

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட கிறிஸ்தவ எழுத்தாளர்கள் ஒன்றியம் அமைக்க ஏற்பாடு

கலை இலக்கியத்தில் ஆர்வம் உள்ளவர்கள் குறிப்பாக எழுத்துத் துறையில் ஈடுபாடு உள்ளவர்கள் தங்கள் முகவரி விபரத்தை எமக்கு அனுப்பிவைக்கவும். மிகவிரைவில் மறைமாவட்ட கிறிஸ்தவ தமிழ் இலக்கியவாதிகளை ஒன்றுகூட்டி, சங்கம் அமைத்து பல ஆக்கபூர்வமான விடயங்களை முன்னெடுக்கவுள்ளோம். எனவே, இலக்கியத் துறையில் ஆர்வமுடையவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org